தமிழ்த் தேசியத்
# தமிழர் கண்ணோட்டம்

10 - 2 திருவள்ளுவர் ஆண்டு 2047 மாசி பிப்ரவரி 1-15 2017 ரூ. 15/-



# தைப்புரட்சியின் சாதனைகளும் சவால்களும்

# தோழர் அ. ஆனந்தன் அவர்களின் தாயார்

# திருவாட்டி. மெட்டில்டா காலமானார்

தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் பொருளாளர் தோழர் அ. ஆனந்தன் அவர்களின் அன்னையார் திருவாட்டி. மெட்டில்டா அவர்கள், 09.01.2017 அன்று காலை உடல் நலக்குறைவு காரணமாக, கோவையிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார். அவருக்கு அகவை 74.

சிறுநீரகச் சிக்கல் காரணமாக கடந்த சில வாரங்களாக மருத்துவ சிகிச்சை மேற்கொண்டிருந்த திருவாட்டி. மெட்டில்டா அவர்கள், தோழர் அ. ஆனந்தன் அவர்கள் பொது வாழ்வில் தொடர்ந்து சுதந்திரமாகச் செயல்பட மிக்கஉறுதுணையாக விளங்கியவர். அவரது மறைவு தோழர் ஆனந்தன் குடும்பத்தா ருக்கு பேரிழப்பாகும்.

கோவை சிங்காநல்லூர் அருகிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அம்மையாரின் உடலுக்கு, தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன், பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தோழர் குழ. பால்ராசு, மதுரை இரெ. இராசு, பழ. இராசேந்திரன், பெண்ணாடம் க. முருகன், தமிழக இளைஞர் முன்னணித் தலைவர் தோழர் கோ. மாரிமுத்து, மகளிர் ஆயம் நடுவண் குழு உறுப்பினர் தோழர் மேரி, தமிழ்க் கலை இலக்கியப் பேரவை பொதுச் செயலாளர் தோழர் நா.வைகறை, தஞ்சை மாநகரச் செயலாளர் தோழர் இலெ. இராமசாமி, திருச்சி மாநகரச் செயலாளர் தோழர் மூ.த. கவித்துவன், த.க.இ.பே. நடுவண் குழு உறுப்பினர்கள் பாவலர் செம்பரிதி, பாவலர் நா. இராசாரகுநாதன், பேரியக்கப் பொதுக்குழு உறுப்பினர் தோழர் ஈரோடு வெ. இளங்கோவன், பேரியக்கச் செயல்பாட்டா ளர்கள் தோழர்கள் செரபினா, கனகசபை, சி. பிரகாசு, கோவை இராசேந்திரன், ஸ்டீபன், இராசேசுக்குமார் உள்ளிட்டோர் மலர் மாலை வைத்து வணக்கம் செலுத்தினர்.



10.01.2017 அன்று காலை நடைபெற்ற இறுதி வணக்க நிகழ்வின்போது, பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் இரெ. இராசு தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன், பழங்குடி மக்கள் தலைவர் திரு. சேவியர், வழக்கறிஞர் நிக்கோலசு ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினார்.

தமிழக உழவர் முன்னணி துணைத் தலைவர் திருச்செந்தூர் திரு. மு. தமிழ்மணி, பேரியக்கப் பொதுக்குழு உறுப்பினர்கள் மதுரை கதிர்நிலவன், சென்னை பழ.நல். ஆறுமுகம், தோழர்கள் மதுரை சிவா, வி. கோவேந்தன், தேனி கண்ணன் உள்ளிட்ட திரளான தோழர்களும், தோழமை அமைப்பி னரும் நண்பர் களும் உறவினர்களும் திரளாக பற்கேற்றனர்.

திருவாட்டி. மெட்டில்டா அவர் களின் மறைவால் வாடும் தோழர் அ. ஆனந்தன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தமிழ்த்தேசியப் பேரியக்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது! ■

# தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்






ஆசிரியர் - வெளியீட்டாளர்

**பெ.மணியரசன்**

இணை ஆசிரியர்

**கி.வெங்கட்ராமன்**

ஆசிரியர் குழு உறுப்பினர்கள்

**கவிபாஸ்கர், க.அருணபாரதி, நா.வைகறை, அ. ஆனந்தன், பொன்னுசாமி, க.காந்திமதி**

வடிவமைப்பு

**கவிபாஸ்கர்**



ஒளி அச்சு

**தமிழ்த் தேசிய வரைகலை, சென்னை - 17.**

அச்சாக்கம்

**பிரின்ட் பாஸ்ட், வேளச்சேரி, சென்னை - 42.**

**தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்**
21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை -600 078.
தொலைப்பேசி : 044-24742911

மின்னஞ்சல்: tkannotam@gmail.com
tamizhdesiyam@gmail.com
இணையம்
http://tamizharkannotam.blogspot.com
http://www.kannotam.com

❖
**தமிழ்த்தேசியப் பேரியக்கம்**
இணையம்
http://tamizhdesiyam.com

❖
கீற்று இணையதளத்திலும் படிக்கலாம்
www.keetru.com


| | |
|---|---|
| தனி இதழ் | ரூ 15 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ 350 |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ 1000 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ 1600 |
| பத்தாண்டுக் கட்டணம் | ரூ 3000 |

## உள்ளே


ஆரியத்தை வீழ்த்து!
பீட்டாவை வெளியேற்று!
சல்லிக்கட்டு தடையைத் தகர்த்தெறி!
*- பெ. மணியரசன்*.......... 6

சமத்துவத்தின் பெயரால்
சமத்துவம் மறுப்பு
*- கி.வெங்கட்ராமன்*..........15

தடைகளைத் தகர்த்து ஏறுதழுவல்.......... 19

நிகரன் விடைகள்..........24

மொழிப்போர் ஈகியர்
வீரவணக்க நிகழ்வுகள்.......... 26


இன்குலாப்
மக்கள் பாவலர் மட்டுமல்ல
தமிழ்த்தேசியப் பாவலரும் ஆவார்!
*- பெ. மணியரசன்*..........24

இன உணர்ச்சி ஓர் இயல்பூக்கம்
சல்லிக்கட்டில் எனது நேரடி அனுபவம்
*- பெ. மணியரசன்*.......... 33


**அறிவிப்பு**

உறுப்புக்கட்டணங்கள்(சந்தா), த.க. விற்பனைத் தொகை ஆகியவற்றைக் கீழ்க்காணும் வங்கி முகவரியில் செலுத்தலாம்
**தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை,**
**இந்தியன் வங்கி,** தி.நகர், தெற்கு உஸ்மான் சாலை-கிளை
**சேமிப்புக் கணக்கு எண்: 6126971024**
IFSC CODE: IDIB000T115

# இந்திய ஏகாதிபத்தியமே, நீயே எங்கள் மாணவர்களைப் போராளி ஆக்கினாய்!



விழித்துக் கொண்ட தமிழர்கள் வீரத்தமிழர்களாகவே இருப்பார்கள்.
வீதிகளில், கடற்கரையில் மாணவர்களும் மாணவிகளும்
பெண்களும் ஆண்களும் போர் முழக்கமிடுகிறார்கள்.
“தடையை மீறுவோம்! சல்லிக்கட்டு நடத்துவோம்!”
இந்திய ஏகாதிபத்தியமே, நீதான் எங்கள் இளைஞர்களைப் போராளிகளாய் மாற்றுகிறாய்!
எங்கள் தமிழை அழிக்க இந்தியை ஏவினாய்!
எரிதழலுக்கு உடல் தந்து இந்தியை எதிர்த்தார்கள் எம் இளைஞர்கள் – 1965இல்!
இந்திப் பேயை விரட்டிட வீதிக்கு வந்த தமிழர்கள் மீது
இந்திய ஏகாதிபத்தியமே, உன் இராணுவத்தை ஏவினாய்!
முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழர்களை சுட்டு வீழ்த்தினாய்!
அதன் பின்னும் – அன்றிலிருந்து இன்று வரை பின்வாங்காமல் போராடுகிறார்கள்!
கச்சத்தீவைப் பிடுங்கி சிங்களர்க்குக் கொடுத்தாய்!
மீனவத் தமிழரை இனக்கொலை செய்ய நீயும் துணை நின்றாய்!
காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு உரிமைகளை நீயே காவு கொண்டாய்!
கன்னடர் – மலையாளி – தெலுங்கர் பறிக்கத் துணை நின்றாய்!
எம் தமிழை வீழ்த்திட இந்தியால் மட்டும் முடியாது என்று கணித்து,
இப்போது சமற்கிருதத்தை ஏவி விட்டுள்ளாய்!
எம் இனத்தை அழிக்க அடுக்கடுக்காய் அணு உலைகள்!
அத்துடன் நியூட்ரினோ – மீத்தேன் திட்டங்கள்!
எங்கள் வேளாண் நிலங்களில் கெய்ல் குழாய் பதிக்கிறாய்!
எம் இன ஈழத்தமிழர் இரண்டு இலட்சம் பேரை அழிக்க
கூட்டுக் கொலைச் சதி செய்தாய் – சிங்களரோடு !
இப்போது எங்கள் மண்ணில் எங்கள் காளைகளுடன் நாங்கள் விளையாட,
எங்கோ இருந்து கொண்டு நீ தடை போடுகிறாய்!
சிந்து வெளியில் மட்டுமல்ல, அதற்கு முந்திய வெளியிலும்
காளை – தமிழர்களின் தோழன்! தமிழர்களின் உடன்பிறப்பு!
சாதி – மதம் கடந்து தமிழர்களாய் சமர்க்களத்தில் நிற்கிறோம்!
இப்படியாக, இப்படியாக, இந்திய ஏகாதிபத்தியமே,
நீ எங்கள் பகைவன் என்பதை நீயாகவே காட்டிக் கொண்டாய்!
நீயே எங்கள் இளைஞர்களை போராளிகளாகவும் ஆக்கி விட்டாய்!
பணத்தைக் கொள்ளையிட, பதவியை நக்கிட,
இனத்தைக் காட்டிக் கொடுப்பதே – இரு கழகங்களின் இலட்சியம்!
இந்தியாவே, அவை உன் கங்காணிகள் என்பதை அறிந்தோம்!
இந்தியத்தை – திராவிடத்தைப் புறந்தள்ளி
“தமிழன்டா” என்ற முழக்கம் ஏந்தி,
ஏறுதழுவல் உரிமை மீட்டுள்ளார் எம் இளையோர்!
எதிர்காலத்தில் தமிழர் இறையாண்மை வென்றிட
ஏறுதழுவல் வெற்றியே – கலங்கரை விளக்கம்! ■

# பவானி ஆற்றைக் காக்க புதிய திட்டம்!

பவானி ஆற்றில் ஆறு இடங்களில் கேரள அரசு தடுப்பணை கட்டி, கசிவு நீர் கூடத் தமிழ்நாட்டிற்கு வராமல் தடுக்கும் வேலையில் இறங்கிவிட்டது!

ஏறுதழுவல் உரிமைக்காக தமிழ்நாடே போராடிக் கொண்டிருக்கிற, சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, கட்டுமான வேலைகளைத் தொடங்கிவிட்டது கேரள அரசு.

இந்திய அரசுக்கு எப்பொழுதுமே, தமிழின எதிர்ப்பு உடன் பிறந்த இயல்பூக்கக் கொள்கை! தமிழ்நாட்டுக் கழகங்களோ தமிழர்களிடம் புரட்சி பூதங்களாக – போர்ப்படைத் தளபதிகளாக பொய்யுருவம் காட்டி, தில்லியிடம் கைகட்டி, கங்காணி வேலை செய்து பணம் – பதவி பார்ப்பவை!

பவானியில் கேரள அரசு அணை கட்டுவதைத் தடுக்க என்ன போராட்டம் நடத்துவது? எம் பட்டறிவில் கண்டறிந்த ஒரு போராட்டத்தை இங்கு முன்வைக்கிறோம்!

கேரள அரசு பவானி ஆற்றில், அணை கட்டும் பணியைக் கைவிடவில்லையெனில், முதல் கட்டமாக பவானி நீரைப் பயன்படுத்தும் கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் வாழும் மலையாளிகள் அனைவரும் – அம்மாவட்டங்களைக் காலி செய்து, கேரளத்திற்குப் போய்விட வேண்டுமென்று நாம் வலியுறுத்த வேண்டும். அவர்கள் தமிழ்நாட்டைக் காலி செய்ய ஒரு மாத கால அவகாசம் கொடுக்கலாம். அப்படியும் காலி செய்யவில்லையென்றால், அறவழியில் அவர்கள் வீடுகளுக்குச் சென்று வேண்டுகோள் வைத்து, நாம் வெளியேற்ற வேண்டும்! இதில், எந்த வன்முறையும் கூடாது!

மலையாளிகள் வாழும் ஊர்களில் உள்ள மக்கள் அனைவரும் இந்த அறவழியில் செயல்பட்டால், அவர்கள் தாங்களாகவே வெளியேறி விடுவார்கள். அதன் பின்னரும், பவானி தடுப்பணைகள் கட்டுவதை, கேரள அரசு கைவிடவில்லையென்றால், தமிழ்நாட்டில் இதர மாவட்டங்களில் வாழும் மலையாளிகளை வெளியேற்றும் அறப் போராட்டத்தை நடத்துவோம்! தமிழ்நாட்டின் தண்ணீர்த் தேவை ஓரளவு குறையும்!

இந்திய அரசால், தமிழர் தாயகமாக “தமிழ்நாட்டு” ஏற்றுக் கொள்ளப்பட்ட 1956 நவம்பர் 1-க்குப் பிறகு, தமிழ்நாட்டில் குடியேறிய மலையாளிகளையே நாம் வெளியேற்ற வேண்டுமென்று கூறுகிறோம். இதற்கான பட்டியலை வாக்காளர் பதிவேடு – மக்கள் தொகைக் கணக்கேடு ஆகியவற்றிலிருந்து எடுக்க முடியும்.

இச்செயல் மனித நேயமா என்று கேட்பவர்களுக்கு, எமது விடை இதுதான்! மூன்று மாவட்டங்களில் உள்ள பல இலட்சம் மக்கள் காலங்காலமாகக் குடித்து வந்த குடிநீரைத் தடுப்பது, மனித நேயமா? மூன்று இலட்சம் ஏக்கர் சாகுபடி நிலங்களை – பாலை நிலங்களாக்குவது மனித நேயமா? கேரளத்திலிருந்து ஓராண்டில் 2,000 ஆ.மி.க. (TMC) தண்ணீர் அரபிக் கடலில் கலக்கிறது.

காவிரித் தீர்ப்பாயத் தீர்ப்பில் கட்டுப்பட்ட ஆறு – பவானி! அது, காவிரியின் துணை ஆறு (Tributary). தமிழ்நாட்டுக்குரிய காவிரி நீர் என்று தீர்ப்பாயம் கணக்கிட்டதில், பவானி நீரும் அடக்கம்! தமிழ்நாட்டின் அனுமதியின்றி கேரளம் அதில் அணை கட்ட முடியாது.

இதில் தலையிட்டு, இந்திய அரசு நீதி வழங்காது! உச்ச நீதிமன்றமும் நீதி வழங்காது. இதுவே கடந்த காலத்தில் நாம் பெற்ற பாடம்! எட்டுக்கோடி தமிழர்களுக்கு, இந்தியா – வேறென்ன வாய்ப்பை விட்டு வைத்திருக்கிறது?

இந்தியத்தேசியம் பேசுவோர், “நாமெல்லாம் இந்தியர்” இல்லையா என்போர், இதை அவர்கள் முதலில் மலையாளிகளிடம் சொல்லி, அவர்களைத் திருத்தட்டும்!

திராவிடவாதிகள், “நாமெல்லாம் திராவிடர் இல்லையா” என்பர். இப்பொழுதாவது மலையாளிகளைத் திராவிடக் கோட்பாட்டை ஏற்கச் செய்யுங்கள்! உங்கள் முயற்சியால் பவானியில் மலையாளிகள் தடுப்பணைகள் கட்டுவதை நிறுத்துங்கள்!

தொடர்ந்து ஆற்றுரிமைகளை இழந்து வரும் தமிழர்களுக்கு, பவானி ஆற்றைப் பாதுகாக்க வேறு வழியே இல்லாத நிலையில்தான், “மலையாளிகளே வெளியேறுங்கள்!” என்கிறோம்! இது வெறும் விளம்பர முழக்கமாக இல்லாமல், செயல்முறை முழக்கமாக மாற வேண்டும்! தமிழர்களே சிந்தியுங்கள்!

■

**ஒரு விளக்கம்!**

கடந்த இதழ் 2017 – சனவரி 16-31 தமிழர் கண்ணோட்டம் வெளியிடவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஏறுதழுவல் உரிமைப் போராட்டங்கள், சென்னை புத்தகக்கண்காட்சி ஆகிய பணிகளில் தோழர்கள் ஈடுபட்டிருந்ததால், கடந்த இதழைக் கொண்டு வர முடியவில்லை. அன்பர்கள் பொறுத்தருள்க! – ***ஆசிரியர்.***

பெ.மணியரசன்

தமிழர்களின் சல்லிக்கட்டு என்னும் ஏறுதழுவலுக்கான தடை என்பது, தமிழர்களின் மரபுப் பண்பாடு ஒன்றுக்குத் தடை என்று மட்டும் கருதக்கூடாது; தமிழர்களை இந்தியா பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கிறது என்பதற்கான இன்னொரு நடவடிக்கையே ஆகும்.

குதிரைப் பந்தயத்தை இந்தியா ஏன் தடை செய்யவில்லை? குதிரைப் பந்தயத்தில் குதிரையைத் துன்புறுத்து கிறார்கள். குதிரை மீது அமர்ந்து, அதை விரட்டுபவர் அதன் பிடரியைப் பிடித்து இழுத்துத் துன்புறுத்துகிறார்; கால் செருப்பின் பக்கவாட்டில் ஆணிகளைப் பொருத்திக் கொண்டு, குதிரையின் விலாப்பக்கம் காலால் தட்டுவதுபோல் வெளியில் தெரியும்போது, குதிரையின் உடம்பில் ஆணிகள் குத்தும் என்கிறார்கள். குதிரைக்குச் சாராயம் கொடுத்து, வெறியூட்டு கிறார்கள். குதிரை தோற்று விட்டால் சிலர் அதை சுட்டுக் கொல்கிறார்கள்.

ஒரு நிமிடத்திற்கும் குறைவாக 20 அடி தொலைவுக்கு ஒரு காளை மீது ஒருவர் கட்டித் தழுவிச் செல்வது காளையைத் துன்புறுத்துவது என்கிறது உச்ச நீதிமன்றம். ஆனால், பல கிலோ மீட்டர் கணக்கில் குதிரை மீது உட்கார்ந்து கொண்டு சாட்டையால் அடித்து அதை விரட்டிச் செல்வது, அதனைத் துன்புறுத்துவது ஆகாதா? துன்புறுத்துவது ஆகாது என்கிறது இந்தியா!

காட்சிப்படுத்தித் துன்புறுத்தும் விலங்குப்பட்டியலில் காளையைச் சேர்த்த காங்கிரசு அரசும், அதை அப்படியே தொடரும் பாரதீய சனதா அரசும் குதிரையை அப்பட்டியலில் சேர்க்காதது ஏன்? காளையை அப்பட்டியலில் இருந்து நீக்காதது ஏன்?



# ஆரியத்தை வீழ்த்து! பீட்டாவை வெளியேற்று!

# சல்லிக்கட்டு தடையைத் தகர்த்தெறி!

இந்த இடத்தில்தான் இனப்பாகுபாடு கடைபிடிக்கப் படுகிறது. காளை, தமிழர்களின் சின்னம்; குதிரை, ஆரியர்களின் சின்னம்! சிந்துச்சமவெளிக்கு முந்திய வெளியிலிருந்து காளை தமிழர்களின் சின்னம்! தமிழர்க் குரிய பழங்கால ஆன்மிகச் சின்னமாக விளங்கியதும் காளையும் பசுவும்தான்!

ஆரியர்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்குள் புகுவதற்கு முன் இந்தியா முழுவதும் வாழ்ந்தவர்கள் தமிழர்கள்! அதற்கான சான்றுதான் பாக்கித்தானிலி ருந்து குசராத் வரை அகழாய்வில் கிடைத்த சிந்து வெளிக் காளைச் சின்னங்கள்!

தமிழர்களின் மரபு வழிப்பட்ட காளை விளையாட்டை ஒழிப்பது என்பது, தமிழர்களின் நனவிலி மனத்திலிருந்து (Sub Conscious mind) அவர்களின் பல்லாயிரம் ஆண்டுப் பண்பாடொன்றை ஒழிப்ப தாகும். தமிழர்களின் இன அடையாளத்தை அழிக்கும் போரில் இதுவும் ஒன்று!

உலகமயம், பன்னாட்டு வேட்டைப் பொருளா தாரம் ஆகியவற்றுடன் ஆரியம் உடன்பாடு கொண் டது. அயலினத் தாயக வேட்டைதான் ஆரியத்தின் வரலாறு. மண்ணின் மக்களின் ஆன்மிகம், பண்பாடு, அடையாளம் அனைத்தையும் அழித்துத் தனது ஆன்மிகம், தனது இனம், தனது மேலாதிக்கப் பண்பாடு, தனது நுகர்வு வெறி ஆகியவற்றைத் திணிப்பது, ஆரியத்தின் அடிப்படைக் குணங்கள்!

வேத காலப் பெருமிதங்கள் புராணக் கதைகள், சமற்கிருத மொழித் திணிப்பு, இந்தித் திணிப்பு, ஆரிய வரலாற்றை இந்திய வரலாறாகச் சித்தரிப்பது, சேர்ந்தாரை அழித்துத் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்வது என்பவை ஆரியத்தின் அடிப் படைக் குண இயல்புகள்!

உள்ளூர் வளங்களை, உள்ளூர் அடையாளங்களை, உள்ளூர் வாழ்வியல் முறைகளை அழிப்பதில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக ஆரியம் ஈடுபட்டு வருகிறது. ஐரோப்பிய முதலாளிய வேட்டைக்காரர்களின் அண்மைக்கால உலகமயக் கொள்கைகளும், அந்தக் காலத்தில் இருந்து தொடரும் ஆரியரின் ஆக்கிரமிப்புக் கொள்கைகளும் ஒன்றே!

நம்முடைய நாட்டுப் பசுக்களை அழித்து, மேற்கத்திய ஜெர்சிப் பசுக்களைக் கொண்டு வர வேண்டும். அதற்கு நாட்டுப்புறக் காளைகளை ஒழித் தாக வேண்டும். ஊசி கொண்டு வந்தால் போதும்; நேரடியாக மேற்கத்திய மாடுகளைக் கொண்டு வர வேண்டியதில்லை. அவர்கள் “கோமாதா“வுக்குக் கும்பிடு போட்டுக் கொண்டே, “ஜெர்சி பசுவுக்கு ஜே“ சொல்பவர்கள்.

நமது நாட்டுக்கோழி இனத்தை அழித்தவர்கள் தான் நமது நாட்டுப் பசுக்களை அழிக்கிறார்கள். காளையில்லாமல் கன்றுக்குட்டி, கன்றுக்குட்டி இல்லாமல் பால் என்று மாற்றும் மேற்கத்திய வணிகக் கொள்ளையர்களுடன் கூட்டணி சேர்ந்துள்ளவை ஆரியக்கட்சிகளான பா.ச.க.வும் காங்கிரசும்! அதில் ஆரியத் தீவிரவாதி ஆரிய வைசியரான மோடி!

ஆரியர் என்பவர் யார்? ஆரிய சத்திரியர்கள், வடநாட்டு ஆரிய பிராமணர்கள், ஆரிய வைசியர்கள், வடநாட்டு ஆரியச் சூத்திரர்கள் எல்லோரும் ஆரிய முகாமுக்குள் அடக்கம். மனதளவில் ஆரியத்தை சுமந்து முழுமையாகத் தமிழை ஏற்றுக் கொள்ள முடியாத தமிழ்நாட்டு பிராமணர்களும் அதில் அடக்கம். ஆரியர் மேன்மைக் கதைகள், ஆரிய சமற்கிரும், ஆரிய வேதகாலப் பெருமைகள் முதலியவையே மேற்கண்ட வகையறாக்களின் உள்ளக் கிளர்ச்சிக்குரியவை.

சங்ககாலத் தமிழர் பண்பாடு, தமிழர் பேரரசுகள், தமிழர் அறிவு நூல்கள், தமிழர் ஆன்மிகம், தமிழ் மொழி அனைத்தையும் கசப்போடு பார்ப்பார்கள், இவை எதிரியின் கருவிகள் என்றே கருதுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தாம் ஆரிய முகாமைச் சேர்ந்தவர்கள்!

நம் மாணவர்கள், நம் இளைஞர்கள் அறிஞர் அண்ணா எழுதிய “ஆரிய மாயை“ நூலை ஒரு தடவை படித்துக் கொள்வது நல்லது!

விலங்குவதைத் தடுப்புச் சங்கம் என்ற போலிப் பெயரில் செயல்படும் “பீட்டா“ என்ற மேற்கத்திய உலகமய வேட்டை முதலாளிகளின் அமைப்பு, ஆரியத்தின் நச்சுக் கிளைகளில் ஒன்று! “பீட்டாவை வெளியேற்று“ என்பதை மட்டும் நம் முதன்மை முழக்கமாக வைத்துக் கொண்டால் தமிழர்கள் இந்தத் தடவையும் ஏமாந்து போவார்கள்!

“ஆரியத்தை வீழ்த்து, பீட்டாவை வெளியேற்று, சல்லிகட்டுத் தடையை தகர்த்தெறி!“ என்று நம் முழக்கத்தை வடிவமைத்துக் கொள்ள வேண்டும், ஆரியத்தின் இன்றைய நவீன வடிவம்தான் இந்திய அரசு! இந்திய ஏகாதிபத்திய அரசுதான் நம் எல்லா தீங்குக்கும் மூல காரணம்! இவற்றை விட்டுவிட்டு, பீட்டாவை மட்டும் ஒற்றை எதிரியாகக் காட்டக் கூடாது. பீட்டா நமக்கு இரண்டாம் நிலை எதிரி!

தமிழ்நாட்டில், காங்கிரசுக் கட்சி காளைத் தழுவலுக்கான தடையை நீக்கச் சொல்லி போராட் டங்கள் நடத்துகிறது. ஆனால் அக்கட்சியின் அனைத் திந்தியத் தலைவர்களான சோனியா காந்தியும், இராகுல் காந்தியும் அக்கோரிக்கையை எழுப்பாதது ஏன்? ஏற்காதது ஏன்?

காவிரி வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் செயல்படுத்த வேண்டும் என்று நம்முடன் சேர்ந்து தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கட்சி, இங்கு போராடியது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் செயல்படுத்த முடியாது என்று கர்நாடகக் காங்கிரசு ஆட்சி சட்டமன்றத்தி லேயே தீர்மானம் போட்டது; அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தி, அதிலும் தீர்மானம் போட்டது.

“உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் செயல்படுத்து” என்று கர்நாடகக் காங்கிரசுக்கு சோனியாவோ, இராகுலோ ஒரு சொல் சொல்லாதது ஏன்? அந்த மவுனம் கர்நாடகத்தின் அட்டூழியத்தை ஆதரிக்கும் மவுனம் அல்லவா?

அதேபோல்தானே இப்போது காளைத் தழுவல் தடையில் காங்கிரசுத் தலைமையின் மவுனம் தமிழ் நாட்டுரிமைக்கு எதிராக உள்ளது.

மானமுள்ள தமிழர்களே, காங்கிரசை விட்டு வெளியேறுங்கள்! விழிப்புணர்வு பெற்ற தமிழர்களே திருநாவுக்கரசர் தில்லிமுல்லுகளை ஏற்காதீர்கள்!

காவிரி, கச்சத்தீவு, முல்லைப்பெரியாறு, பாலாறு, மீனவர் படுகொலை, அன்றாடம் தமிழ்நாட்டு மீனவர்கள் சிங்களப்படையால் தாக்கப்படுவது, கடத்தப்படுவது என உரிமைப் பறிப்புக்கு மூலகாரணமும் முதற்காரணமும் காங்கிரசு தான்! அறுநூறுக்கும் மேற்பட்ட மீனவத் தமிழர்களின் உயிரை சிங்களக் கடற்படை பறிக்கக் காரணமாக இருந்தது காங்கிரசுக் கட்சி! ஒன்றரை இலட்சம் ஈழத்தமிழர்களை சிங்களப் படை இனப்படுகொலை செய்யத் துணை நின்றது காங்கிரசுக் ஆட்சி!

இப்பொழுது தமிழர் மரபுரிமையாகவும், பண்பாட்டு அடையாளமாகவும் விளங்கும் ஏறுதழுவல் உரிமை கோரி மாணவ மாணவிகளும், இளைஞர்களும் அறப்போராட்டம் நடத்தி, அ.தி.மு.க. அரசின் காவல்துறையினரால் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்படும்போது, சோனியாவும், இராகுலும் வாய்த்திறக்க மாட்டார்கள் என்றால் அந்தக் காங்கிரசு, தமிழர்களுக்குத் தேவையா? தமிழர்களே சிந்தியுங்கள்!

பாரதிய சனதாக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர்கள் தமிழர்களின் தலையைத் தடவி டெல்லியில் பதவி பெறுவதற்காக என்னென்ன பொய் பேசினார்கள்? மன்னிப்புக் கேட்டுவிட்டதால் பொன்னாரின் பொய்கள் மெய்களாகிவிடா!

பொங்கலுக்கு சல்லிக்கட்டு நடத்த உரிமை வரும் என்று சொல்லிக் கொண்டிருந்த பொன்னார், காட்சிப் படுத்தும் விலங்குகள் பட்டியலிலிருந்து காளையை நீக்கிட ஏன் முயலவில்லை? அது பற்றி ஏன் அவர் தமிழர்களிடம் எதுவும் பேசவில்லை? மந்திரத்தில் மாங்காய் பறிப்பதுபோல் சல்லிக்கட்டு உரிமை வரும் என்று சவடால் அடித்துத் தமிழர்களை ஏமாற்றியது ஏன்?

காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திடக் காலக்கெடு விதித்து உச்ச நீதிமன்றம் கட்டளையிட்ட போது, அந்தத் தீர்ப்பைக் காலி செய்து கன்னடர்களின் இனவெறிக்கு பக்கத் துணையாக நின்றது மோடி அரசு.

உயிரைப் பறிப்பதுபோல் காவிரியைத் தமிழர்களிடமிருந்து பறித்துவிட்டது பா.ச.க. அரசு. தற்காப்பு உணர்ச்சியும் தன்மானமும் உள்ள தமிழர்கள் பா.ச.க.வை மன்னிப்பார்களா? பொன். இராதாகிருட்டிணன், தமிழிசை போன்றோர் தமிழர் உரிமையைப் பலியிட்டு, பா.ச.க.த் தலைமையிடம் பதவி வாங்கும் தந்திரக்காரர்கள்! தமிழர் உரிமைக்கு வாதாடுவது போல் பாசாங்கு செய்கிறார்கள்.

அவர்கள் கூறிக் கொள்ளும் இந்து மதவாதத்தில் தமிழர்களுக்கு உரிய இடம் கிடையாதா? தமிழ்நாட்டில் பெரும்பான்மையோர் இந்துக்கள் தானே! தமிழ் இந்து என்பவர் பா.ச.க. அகராதியில் சூத்திர இந்து அல்லது பஞ்சம இந்து! சம உரிமையுள்ள இந்து அல்லர்!

அதனால்தானே ஈழத்தில் இந்துக்கோயில்களை புத்தக் கோயில்களாக மாற்றும் இனவெறி அரசை பா.ச.க. கண்டிக்கவில்லை. தடுக்கவில்லை! சோனியா காந்தியின் காங்கிரசும் கண்டிக்கவில்லை. நரேந்திர மோடியின் பா.ச.க. நடுவண் அரசு சிங்கள இனவெறியர்களுடன் கூடிக் குலாவிக் கொண்டுள்ளது. 2008 2009இல் இந்திய அரசின் துணையோடு சிங்கள அரசு தமிழீழத்தில் இன அழிப்புப் போர் நடத்தியபோது, அந்தப் போரை ஆதரித்த கட்சி பா.ச.க.! ஏன்? ஆரிய ஆதிக்க இந்தியாவுக்கும் ஆரியச் சிங்கள இலங்கைக்கும் பொது எதிரி தமிழினம்!

இப்படிப்பட்ட தமிழர் உரிமைப் பறிப்புக் கட்சியான பா.ச.க. தமிழ்நாட்டில் செயல்படலாமா? தமிழர்கள் அக்கட்சியில் இருக்கலாமா?

வெள்ளையர் ஆட்சி வெளியேறிய பின் விடுதலை இந்தியாவில் அதுவரை இருந்த தாயக மண்ணுரிமை, ஆற்றுரிமை, கடல் உரிமை ஆகியவற்றை அதிகமாக இழந்த ஒரே இனம் தமிழினம்!

அண்டை நாட்டையும் அண்டை மாநிலங்களையும் பயன்படுத்தி, காங்கிரசு, பா.ச.க. நடுவண் ஆட்சிகள் தமிழ்நாட்டு உரிமை, தமிழர் உயிர் ஆகியவற்றை அன்றாடம் பறித்துக் கொண்டுள்ளது.

இந்திய ஏகாதிபத்திய அரசின் தமிழர் உயிர் பறிப்பு, உரிமைப் பறிப்பு அட்டூழியங்களைத் தடுத்து நிறுத்தும் தத்துவமும் செயல்முறையும், தமிழ்நாட்டுத் திராவிட ஆட்சிகளுக்கு இல்லை!

அவனியாபுரத்தில், அலங்காநல்லூரில் தமிழ் இளைஞர்களைக் காவல்துறையினர் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்குவதைப் பார்க்கும்போது, வெள்ளையர் ஆட்சி நம்மவரைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியதற்கும் இதற்கும் எந்த வேறுபாடும் தெரியவில்லை. ஓ. பன்னீர்செல்வம் சசிகலா நடத்தும் தமிழ்நாட்டு ஆட்சி, நரேந்திர மோடிக்கு அடியாள் வேலை செய்கிறது. செயலலிதா ஆட்சி நடத்தினாலும் இதே அடக்குமுறையைத்தான் ஏவி இருப்பார். அவர் நடத்திய அடக்குமுறைகள் ஏராளம்!

ஈழத்தில் தமிழின அழிப்புப் போர் இந்தியாவின் பங்களிப்புடன் நடந்தபோது, போர் நிறுத்தம் கோரி

தமிழ்நாட்டில் போராடிய தமிழ் உணர்வாளர்களை அப்போதைய கருணாநிதி ஆட்சி 2008 - 2009இல் கடுமையாகத் தாக்கியது. மேடையில் பேசியவர்களை ஆட்சிக் கவிழ்ப்பரப்புரை (124A) சட்டம், தேசியப் பாது காப்புச் சட்டம் ஆகியவற்றில் சிறைப்பிடித்து உள்ளே தள்ளினார் கருணாநிதி!

அவனியாபுரம், அலங்காநல்லூர் காட்டுமிராண்டித் தாக்குதலைக் கண்டபோது, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் பிப்ரவரி 17 2009இல், ஈழத்தமிழர் ஆதரவு முழக்கமிட்ட வழக்கறிஞர்களைக் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கிய கருணாநிதி ஆட்சியின் கங்காணி வன்முறைகள்தான் மனத்திரையில் ஓடின!

ஓ.பி.எஸ். அரசு, காளை வைத்திருப்பவர்களிடம் சல்லிக்கட்டுக்குச் செல்ல மாட்டேன் என்று காவல் துறையினரை ஏவி எழுதி வாங்குகிறது! இதைவிட தமிழினத்தைத் தில்லிக்குக் காட்டிக் கொடுக்கும் இழிசெயல் வேறென்ன இருக்க முடியும்? வெள்ளைக் காரன் குற்றப்பரம்பரை பட்டியல் வைத்து, கையெழுத்து வாங்கியதை போல் இது இருக்கிறது.

போலியாகத் தமிழ் மொழி உரிமை, தமிழர் உரிமை களைப் பேசி, தமிழர் ஆதரவைப் பெற்று ஆட்சியைப் பிடிப்பது, அந்த ஆட்சியைப் பயன்படுத்தி குடும்ப ஆட்சி நடத்துவது, மக்கள் சொத்தைக் கொள்ளை அடிப்பது, அக்குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள இந்திய ஏகாதிபத்திய ஆட்சிக்கு அடியாள் வேலை பார்ப்பது என்பதுதான் தி.மு.க. ஆட்சியிலும் அ.தி.மு.க. ஆட்சியிலும் நாம் கண்டறிந்த உண்மைகள்!

தமிழர் உரிமை மீட்பு அறப்போரில் களம் காணும் இளைஞர்கள், புறக்கணிக்க வேண்டிய கட்சிகள் காங்கிரசு, பா.ச.க. மட்டுமல்ல, கங்காணி வேலை பார்தது தமிழர்களை தில்லிக்கு அடமானம் வைத்து தன்னலக் கொள்ளை, தன்னல அதிகாரம் செய்யும் அ.தி.மு.க. தி.மு.க. கட்சிகளும்தான்!

தமிழினத் தற்காப்பு எழுச்சி கருக் கொண்டிருக்கும் இந்த வேளையில், அறிவாற்றலும் போர்க்குணமும் கொண்ட இளைஞர்கள் பொறுப்புடன் தொலை நோக்குடன் சிந்திக்க வேண்டும். இல்லையேல் இந்த எழுச்சி, காட்டாற்று வெள்ளம் போல், பின்னர் காணாமற் போய்விடும்!

கடந்த காலங்களில் இதேபோல் ஈழத்தமிழர்களுக் கான எழுச்சி 2008-2009-இல் எழுந்தது. பெரிய அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு தன்னெழுச்சி யான தமிழர் எழுச்சியாக மாணவர்களிடையே, இளைஞர்களிடையே அது எழுந்தது. பின்னர் அது காணாமல் போய், கங்காணிக் கட்சிகளின் செல்வாக்கே மீண்டது.

தம்பி பாலச்சந்திரன் சிங்களக் காடையர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட படங்கள் வெளியான போது, தமிழகம் தழுவிய தமிழர் எழுச்சி மாணவர்களிடையே இளைஞர்களிடையே எழுந்தது. பின்னர் அது காணாமல் போனது. கங்காணிக் கட்சிகளின் செல்வாக்கே தெரிந்தது.

உடனடித் தன்னெழுச்சிகளால் களம் காணும் இளைஞர்களுக்குத் தொலைநோக்குச் சிந்தனைகள் வேண்டும். ஒவ்வொரு உரிமையாக இழந்து வரும் தமிழினத்திற்கு உறுதியுள்ள பாதுகாப்பு அரணாகப் புதிய அரசியல் இயக்கம். வளர வேண்டும். அது தேர்தல் அரசியலில் இறங்கித் தேங்கி விடாததாக இருக்க வேண்டும்.

அதற்கான முன் தேவை தெளிவான புதிய இலட்சியம் அதற்குரிய தத்துவம், அதற்குரிய அமைப்பு!

தமிழ்த்தேசியம் தான் தமிழர் உரிமை மீட்பிற்கும், உரிமைக் காப்பிற்குமான சரியான மாற்றுத் தத்துவம்! பணம், பதவி, விளம்பரம் மூன்றுக்கும் ஆசைப்படா தவர்களின் தலைமையில் அது இயங்க வேண்டும். தமிழ்த்தேசியத்தையும் பதவி வேட்டைக்குப் பயன் படுத்த முடியும். பட்டறிவிலிருந்து இளைஞர்களுக்கு சரியான பாதை காண வேண்டும்.

இந்தத் திசையில்தான் தமிழ்த்தேசியப் பேரியக்கம் தன்னை ஒப்படைத்துக் கொண்டு செயல்படுகிறது!

இலட்சியமில்லாத எழுச்சி எதிர்பார்த்த இடம் சேர்க்காது!

செயல்முறையோடு இல்லாத இலட்சியம் ஏமாற்று வித்தையாகும்!

அறிவுக்கூர்மையும் ஆராய்ச்சி மனப்பான்மையும் கொண்ட முதல் இனம் தமிழினம்!

அதற்கான சான்றாகவே நம் தமிழ்மொழி விளங்குகிறது!

ஆர்த்தெழுக! இலட்சியம் ஏந்துக! அமைப்பை அடையாளம் காண்க!

புல்லுருவிகளும் போலிகளும் புகுந்துவிடாமல் விழிப்புடன் செயல்படுக!

ஒற்றைக் கதாநாயகக் கனவு காண்போரைத் தலைவராக ஏற்காதீர்!

பல தலைவர்கள் உருவாகட்டும்! கூட்டுத் தலைமையின் கொள்கலனாக தமிழ்த்தேசிய எழுச்சி வீறு கொள்ளட்டும்!

ஆரியத்தை வீழ்த்துவோம்!

பீட்டாவை வெளியேற்றுவோம்!

சல்லிக்கட்டுத் தடையைத் தகர்ப்போம்! ■



பெ. மணியரசன்

**தைப்புரட்சி என்று போற்றப்படும் தமிழர் புரட்சி வழங்கியுள்ள பாடங்கள் :**

1. இக்கால இளைஞர்களும் மாணவர்களும் - ஆண்களும் பெண்களும் - சமூகச் சிந்தனை இன்றி நுகர்வு வாழ்வில் தோய்ந்து உதிரிகளாக இருக்கிறார்கள் என்ற வசையைத் தைப்புரட்சி புரட்டிப் போட்டு விட்டது.

சமூகப் பொறுப்பு, தமிழினப் பொறுப்பு ஆகிய வற்றில் பெரியவர்களுக்கே வழிகாட்டும் அளவிற்கு இளைஞர்கள் இலட்சோப இலட்சமாய்த் தமிழ் நாடெங்கும் களத்தில் இறங்கி விட்டார்கள்! அவர்கள் பொறுப்பற்ற உதிரிகளுமல்லர்; விவரம் அறியாதவர் களுமல்லர்! எல்லாம் தெரிந்தவர்களே!

2. ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்டுள் ளோம்; ஒன்றரைக் கோடி உறுப்பினர்களைக் கொண்டுள்ளோம் என்று கூறிக் கொள்ளும் கட்சிகள், தன்னலப் பூதங்களே தவிர, தமிழர்களுக்கான தற்காப்புத் தலைமைகள் அல்ல என்பதைத் தைப்புரட்சி உணர்த்தி விட்டது.

# தைப்புரட்சியின் சாதனைகளும் சவால்களும்

அவற்றின் தலைவர்கள் தங்கள் பெயருக்கு முன்னால் சுமந்து கொண்டிருக்கும் புகழ்ச்சிப் பட்டங்கள் செல்லப் பிராணிகளுக்கு சூட்டப்பட்ட பெயர்களை விடவும் பொருத்தமற்றவை என்பதைக் காட்டி விட்டது!

3. இந்தியன், திராவிடன் என்ற போலி இனப் பெயர்களைத் தைப்புரட்சிப் புயல், வரலாற்றின் குப்பைக் கூடையில் வீசி விட்டது.

"தமிழன்டா!" என்ற முத்திரை முழக்கத்தைத் தைப்புரட்சி நமது பதாகைகளுக்கு வழங்கியுள்ளது.

"தமிழன்டா" முழக்கத்தில், ஆண்களும் பெண்களும் அடக்கம்; அனைத்து மதங்களும் சாதிகளும் அடக்கம்!

4. இந்தியத் தேசியவாதக் கட்சிகள் - தமிழ் நாட்டில் வெகுமக்கள் கட்சிகளாக - இனி ஒரு பொழுதும் எழ மாட்டா! இந்தியத்தேசியவாதிகள் பெயருக்குக் கட்சி நடத்திக் கொண்டிருக்கலாம் என்ற வரலாற்றுப் பாதையை வரையறுத்து விட்டது.

5. பெரும் பெரும் நாளிதழ்கள் வார ஏடுகள், பெரும் பெரும் தொலைக்காட்சிகள் முதலிய ஊடகங்களைவிட வலிமை மிக்க ஊடகம் ஒவ்வொரு தமிழன் தமிழச்சி கையிலும் பையிலும் இருக்கின்றது, அது சமூக வலைத்தளம் என்று காட்டிவிட்டது!

அவற்றின் வழியாக நடந்து வரும் கருத்துப் பரிமாற்றங்கள், திறனாய்வுகள், அழைப்புகள் ஆகியவற்றால் தான் தைப்புரட்சி ஏற்பட்டது.

**வெள்ளம்போல் தமிழர் கூட்டம்**
**வீரங்கொள்கூட்டம்; அன்னார்**
**உள்ளத்தால் ஒருவரே மற்று**
**உடலினால் பலராய்க் காண்பார்**
**கள்ளத்தால் நெருங்கொணாதே;**
**எனவையம் கலங்கக்கண்டு**
**துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்**
**சொக்கும் நாள் எந்தநாளோ?**

என்று ஏங்கிக் கேட்டார் பாவேந்தர். அந்நாள் இந்நாள் என்று மெய்ப்பித்தார் அவர் பேரப் பிள்ளைகள்!

### எச்சரிக்கைகள்

**1. இசவாதிகள்**

தமிழர் எழுச்சியைத் திசை திருப்பிட "இசவாதிகள்" (Isamists) கடுமையாக முயல்வார்கள். "இசவாதிகள்" என்பவர் யார்? வெளிநாட்டில், வடநாட்டில், தமிழ் நாட்டில் முந்தியத் தலைமுறையினர் அவரவர் வாழ்ந்த காலத்தில், அவரவர் எடுத்துக் கொண்ட சிக்கலுக்கேற்ப தயாரித்த சிந்தனைத் தொகுப்புகளை அப்படியே இப்போதும் ஏந்திக் கொண்டு, அந்த சிந்தனைகளுக் கேற்ப தமிழ்ச் சமூகத்தை மாற்றிட முயன்று தோற்போர் ஆவர்!

நோயாளியை ஆய்வு செய்து அவருக்கு வந்திருக்கும் தனித்துவமான நோயை அறிந்து அதற்கான மருத்துவ முறையைக் கையாண்டு, மருத்துவம் பார்ப்பவர் சிறந்த மருத்துவர்! என்னிடம் உள்ள ஒற்றை மருந்து எல்லா நோய்களையும் தீர்த்து விடும் என்று கூறுபவர் மருத்துவர் பெயரில் உள்ள மந்திரவாதி! தமிழ்நாட்டில் மந்திரவாத இசங்களுக்குப் பஞ்சமில்லை!

ஒட்டுமொத்தத் தமிழர்களின் எழுச்சியைக் கூறு போட்டுப் பங்கிட்டுக் கொள்ள இசவாதிகள் ஓடி வருவார்கள்!

**2. ஆரிய இந்துத்துவா வாதிகள்**

ஆரியப் பார்ப்பனிய இந்துத்துவா வாதிகள் தமிழர் அடையாளங்களை இந்துத்துவா அடையாளங்களாகத் திரித்துக் காட்டித் திருதராட்டிர ஆலிங்கனம் செய்து தமிழர் எழுச்சியைச் சீர்குலைக்க வருவார்கள். எதிரி மீது பாசம் காட்டுவது போல் பாவனை செய்து கட்டித் தழுவி இறுக்கிக் கொன்று விடுவதுதான் திருதராட்டிர ஆலிங்கனம்!

ஆரியப் பார்ப்பனிய இந்துத்துவா வாதிகள், புராணக் கதைகளற்ற தமிழர் பொங்கல் விழாவை, கருங்கிராந்தி நோய் என்பது போல் சங்கராந்தி என்பார்கள்! தமிழரின் ஏறுதழுவல் 'ரிஷப வைபவம்' என்பார்கள்! ஆனால் ஆரியவர்த்த மாநிலங்களான உ.பி., ம.பி., பீகார் போன்றவற்றில் தமிழரின் பொங்கல் விழாவைப் போல் போகி தொடங்கி ஏறுதழுவல் வரை நான்கு நாள் நிகழ்வுகள் இல்லை.

**3. இந்திய ஏகாதிபத்திய அரசு**

இந்திய ஏகாதிபத்தியத்தின் நடுவண் அரசு தமிழர்களின் தைப்புரட்சி எழுச்சியைப் பழிவாங்கும் வெறியுடன் குறுகுறு என்று பார்த்துக் கொண்டுள்ளது. என்னென்ன வகைகளில் தமிழர்களை ஒடுக்கி, அடக்கி வைக்கலாம் என்று கருவிக் கொண்டுள்ளது.

காலம் காலமாக நடந்துவந்த காளை விளையாட்டான சல்லிக்கட்டை நடத்திட அனுமதி கோரி, தமிழ் நாடெங்கும் இந்தியாவில் எங்குமே காணாத அளவிற்கு, கோடிக்கணக்கான மக்கள் அங்கங்கே குவிந்து, ஆறுநாட்கள் தொடர்ந்து அறப்போராட்டம் நடத்தினார். மோடி அரசு மக்களின் குரலுக்கு செவி சாய்த்து, தடைசெய்யப்பட்ட விலங்குகள் பட்டியலிலிருந்து காளையை நீக்கியிருக்க வேண்டும். தானே முன்வந்து விலங்குகள் துன்புறுத்தல் தடைச்சட்டம் 1960ஐ திருத்தியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை.

மாணவர் போராட்டத்தின் நெருக்கடி காரணமாக செயல்பாட்டில் இறங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் ஓ.பி.எஸ். தில்லிக்குச் சென்று, நரேந்திர மோடியிடம் நேரடியாகக் கோரிக்கை வைத்தபோதுகூட, தம்மால் எதுவும் செய்ய முடியாது என மறுத்துவிட்டார் மோடி!

தமிழினத்தின் மீதுள்ள நிரந்தரக் காழ்ப்புணர்ச்சியால், பா.ச.க. நடுவண் ஆட்சி குறிப்பாக தலைமை

அமைச்சர் நரேந்திர மோடி, “தமிழர்களின் ஞாயத்தை ஏற்றுக் கொண்டால், அவர்களுக்குப் பணிந்து போவது போல் ஆகும்” என்று கருதி, தமிழ்நாடு அரசே சட்டத் திருத்தத்துடன் அவசரச்சட்டம் இயற்றிக் கொள்ளு மாறு கூறிவிட்டது.

காவிரி வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தபடி, மேலாண்மை வாரியம் அமைக்கப்பட இருந்த நிலையில், கடைசி நேரத்தில் அதைத் தட்டிப் பறித்தது மோடி அரசு! தொடர்ந்து இனப்பாகுபாடு பார்த்துதான் தமிழர்களை இந்தியா வஞ்சிக்கிறது. நம் பண்பாட்டு விழாவான ஏறுதழுவலை தடைசெய்வதிலும் அதே அணுகுமுறையைத்தான் இந்தியா கொண்டுள்ளது.

“தமிழ்நாட்டின் போராட்டங்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டுள்ளோம். நடுவணரசின் உளவுத் துறை விவரங்களைத் திரட்டிக் கொண்டுள்ளது. தமிழ் நாடு அரசு உதவி கேட்டால், உடனடியாக துணை இராணுவப் படைகளை அனுப்பி வைப்போம்” என்று தில்லி உள்துறை அதிகாரி ஒருவர் கூறியதாக இந்து ஆங்கில நாளோடு (24.01.2017) செய்தி வெளியிட் டுள்ளது.

**4. இனப் பெயரில் போலிகள்**

தமிழினம், தமிழ்த்தேசியம் என்ற பெயரிலேயே பதவி வேட்டையாடும் போலிகள் புகுவார்கள்; புதி தாகவும் உருவாவார்கள்!

5. தைப்புரட்சியைப் புகழ்ந்து அல்லது திறனாய்வு செய்து கட்டுரை எழுதுவோரில் பலர், கடைசியில் திராவிடவாதத்துக்கு ஆதரவாகவோ அல்லது இந்தியத் தேசியத்திற்கு ஆதரவாகவோ எழுதி முடிப்பர். இவ்வாறு தமிழின எழுச்சியை மடைமாற்றுவர்.

தைப்புரட்சியில் பங்கு கொண்ட தைப்புரட்சியை ஆதரித்த தமிழர்கள் அனைவரும் இந்த எச்சரிக்கை களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**அ.இ.அ.தி.மு.க. அரசு**

சென்னைக் கடற்கரை, மதுரை, கோவை, திருச்சி, அலங்காநல்லூர் மற்றும் தமிழ்நாடெங்கும் ஆறு நாட்கள் வரை மக்கள் திரள் 7 அறப்போராட்டத்தை அ.தி.மு.க. அரசு அனுமதித்ததும், வன்முறை ஏவாமல் இருந்ததும் ஓர் அரசியல் உத்திதான்!

ஆனால் அதற்கு முன், அவனியாபுரத்தில் 14.01.2017 அன்று அறவழியில் சாலை ஓரமாக இயக்குநர் வ. கவுதமன் தலைமையில் அமர்ந்து, சல்லிக்கட்டு தடை நீக்கிட முழக்கமிட்ட இளைஞர்கள் மீது கடுமையாகத் தடியடி நடத்திக் காயப்படுத்திக் கூட்டத்தைக் கலைத்து, அவர்களைத் தளைப்படுத்தினார்கள். அதனால் அ.தி.மு.க. அரசுக்குப் பெரிய அளவில் கெட்ட பெயர் ஏற்பட்டது.

இப்பின்னணியில் 17.1.2017 அன்று சென்னை மெரினா கடற்கரையில், வெள்ளம் போல் திரளத் தொடங்கிய தமிழர்கள் மீது அ.தி.மு.க. அரசு கைவைக்கத் தயங்கியது. மாணவர்களும் இளைஞர் களும் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தெல் லாம் வந்து குவிந்தார்கள்.

தமிழ்நாட்டின் பிற பெருநகரங்கள், நகரங்கள், பேரூர்கள், சிற்றூர்கள் என எல்லா இடங்களிலும் மக்கள் வெள்ளம் அங்கங்கே கூடிப் பெருகியது. இரவு பகலாகக் கூட்டம் தொடர்ந்தது.

சல்லிக்கட்டு உரிமையுடன், காவிரி உரிமை, உழவர் உரிமை, கச்சத்தீவு, பாலாறு, முல்லைப்பெரியாறு எனப் பல உரிமைகள் பேசினர். மீத்தேன் எதிர்ப்பு, கெயில் குழாய் எதிர்ப்பு, வியோ பால் புட்டி பெப்சி கோகோ கோலா பாட்டில்கள் உடைப்பு, பன்னாட்டு வேட்டை நிறுவனங்கள் எதிர்ப்பு, பீட்டா வெளியேற்றல் எனத் தமிழ்நாட்டின் முகாமையான வாழ்வியல் உரிமை முழக்கங்களை எழுப்பினர். இயற்கை வேளாண்மை, தமிழர் மரபு உணவு பற்றியெல்லாம் உரையாடினர்.

கட்டுக்கோப்பாகவும், தன்னொழுங்குடனும், கண்ணியத்துடனும், ஆண்களும் பெண்களும், மாண வர்களும் இலட்சக்கணக்கில் ஒரே இடத்தில் இரவு பகலாக இருந்து முழக்கமிட்டனர். சுற்றுப்புற தூய்மை பேணினர். தாராள மனம் படைத்த தமிழ்ப் பெருமக்கள் உணவு, தின்பண்டம், கழிவறை வசதி எனப் பல உதவிகள் செய்தனர். பொங்குமாங்கடலென மக்கள் குவிந்தனர்.

எனவே வன்முறையை ஏவினால், 1965 மொழிப் போரில் காங்கிரசு காவல்துறையையும் இராணுவத் தையும் ஏவி இரத்தக்குளியல் நடத்தியதுபோல் ஆகி விடும்; தமிழ்நாட்டில் காங்கிரசு அத்தியாயம் முடிவுக்கு வர அதுவே தொடக்கமாக இருந்தது என்ற வரலாற்றை உணர்ந்த அ.தி.மு.க. அரசு, தமிழர் உரிமைக்கான அறப் போராட்டம் நடத்திய மக்களுக்கு உதவியாக இருந்தது.

சல்லிக்கட்டு உரிமை வழங்கும் அவசரச்சட்டம் கொண்டு வந்தது அ.தி.மு.க. அரசு! அந்தச் சட்ட நகலை வெளியிடாமல் மூடு மந்திரமாக வைத்துக் கொண்டு, மக்கள் வெள்ளத்தைக் கலைந்து போகச் சொல்லி 23.01.2017 அன்று விடியற்காலையிலிருந்து நெருக்கடி கொடுத்தனர் காவல்துறையினர்.

சென்னைக் கடற்கரையில் ஆயிரக்கணக்கில் காவல் துறையினரைக் கொண்டு வந்து இறக்கினர்; சரக்குந்து களில் தடிகளையும் கொண்டு வந்தனர்.

பிடித்து இழுத்தும், தள்ளியும், தூக்கி எறிந்தும், அடித்தும், விரட்டியும் மக்களைக் கலைத்தனர். பெண்கள், பெரியவர்கள், மாணவர்கள், மாணவிகள் என எல்லாரும் அடிக்கப்பட்டனர். காவல்துறையினரே, தானி வண்டிக்குத் தீ வைத்தனர்; காவல் நிலையத் திற்கும் தீ வைக்கப்பட்டது.

சல்லிக்கட்டு உரிமையை மீட்டிடும் சட்டம் கொண்டு வந்த பின் தடியடி நடத்தியது ஏன்? அடிபட்டு

கடற்கரையில் சூழ்ந்து நின்ற மக்களுக்கு உணவும், தண்ணீரும் வழங்கிய மீனவ மக்களைத் தாக்கியது ஏன்? இதுதான் அரசின் வன்மம்! காவல்துறையின் பொது உளவியல் இதுதான்!

காட்சிப்படுத்தத் தடை செய்யப்பட்ட விலங்குகள் பட்டியலிலிருந்து காளையை இந்திய அரசு நீக்க வில்லை. தமிழ்நாடு அரசு போட்ட சட்டத்தை எதிர்த்து, எதிர்த்தரப்பினர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தால் தடைப் பட்டியலில் காளை தொடர்வது ஒரு வினாக் குறியே! இந்த ஒன்றைத் தவிர, மற்றபடி தமிழ்நாடு அரசு கொண்டு வந்த திருத்தச் சட்டம் வரவேற்கத்தக்கதே!

இவ்வாறு இருக்கும்போது, பொறுமையாக இந்த உண்மைகளை விளக்கி, கூட்டத்தைப் பதற்றமின்றி விடை பெறச்செய்திருக்கலாம்.

வரலாறு காணாத அளவிற்கு உலகமே வியக்கும் வகையில் நடந்த தமிழ்நாடு தழுவிய மாபெரும் மக்கள் திரள் எழுச்சியை அமைதியாகக் கலைய விட்டால், மீண்டும் போராட அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் என்று கருதி, உடலில் மட்டுமின்றி நெஞ்சத்திலும் காயத்தோடு அனுப்ப வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கருதியிருக்கலாம்.

அடுத்து வரும் காலங்களில், சனநாயகப் போராட்டங்களை வழமைபோல் அனுமதிக்காமல் கெடுபிடிகள் செய்யலாம். அதேவேளை தமிழர்களை அண்டிப் பிழைக்கும் நுகர்வோராக மாற்றுவதற்கு மேலும் சில இலவசங்களையும் வழங்கலாம். இவ்வாறான இரு வழிகளில்தான் அ.இ.அ.தி.மு.க. அரசு தமிழர் எழுச்சிக்குப் பிந்திய செயல்முறையை வகுத்துக் கொள்ளும். இவ்வாறான அரசின் போக்கை எதிர் கொள்ளும் சிந்தனைத் தெளிவும், மன உறுதியும் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவை.

**தி.மு.க.**

தைப்புரட்சியாக விளங்கிய தமிழர் எழுச்சியையும், அதில் பங்கேற்றோர் தாக்கப்பட்டதையும் பயன்படுத்தி, மக்கள் செல்வாக்குப் பெற்று ஆட்சியைப் பிடிக்கும் உத்திதான் தி.மு.க.வுக்கு இருக்கும். உண்மையான தமிழின உரிமை மீட்பு நடவடிக்கைகளில், தி.மு.க. இறங்குவதற்கு வாய்ப்பில்லை. திருந்துவதற்கும் வாய்ப்பில்லை. அக்கழகத்தின் ஆட்சியில்தான் பல்வேறு உரிமைகளைத் தமிழ்நாடு இழந்தது.

சிங்கள அரசு இந்தியாவின் துணையோடு ஈழத் தமிழர்கள் மீது இன அழிப்புப் போர் நடத்தி, ஒன்றரை இலட்சம் தமிழர்களை படுகொலை செய்த காலத்தில், அதைக் கண்டித்து 2008 - 2009 ஆண்டுகளில் மேடையில் பேசியவர்கள் மீது "தேசியப் பாதுகாப்புச் சட்டம்" (N.S.A.), அரசுக் கவிழ்ப்புப் பரப்புரை (Sedition - 124A) போன்ற சட்டங்களின் கீழ் வழக்குகளைத் தொடுத்து சிறையில் அடைத்தது கலைஞர் ஆட்சி.

போர் நிறுத்தம் கோரி போராடிய வழக்கறிஞர்களை சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் சுற்றி வளைத்து, அடித்து நொறுக்கி எலும்புகளை உடைத்துப் படுகாயப்படுத்தியது காவல்துறை. (17.02.2009). ஒரு நீதிபதி எலும்பும் முறிக்கப்பட்டது.

அரசு அமைத்த விசாரணை ஆணையம், குற்றம் இழைத்த காவல்துறை அதிகாரிகளை அடையாளம் கண்டு அறிக்கை கொடுத்தது. ஆனால், அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க மறுத்தார் அன்றைய முதலமைச்சர் கருணாநிதி.

இது அண்மைக்கால தி.மு.க. அரசியலுக்கான ஒரு சான்று! அதற்கும் முந்தைய கால சான்றுகள் ஏராளம்! ஏராளம்! காங்கிரசு கூட்டணி அரசில் தி.மு.க. அமைச்சர் பதவி வகித்தபோதுதான், "காளை" தடை செய்யப்பட்ட விலங்குகள் பட்டியலில் சேர்க்கப்பட்டது (2011).

எனவே, அ.இ.அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் இனத் துரோக அரசியல் என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்கள்தான்!

## மாணவர்களின் வரலாற்று முன்னெடுப்பும் மக்களின் பங்களிப்பும்

ஆதிக்க இந்தியை விரட்டிட 1965இல் மாணவர்கள் முன்னெடுத்த வரலாற்றுச் சிறப்புமிக்க மொழிப் போருக்குப் பின், ஈழத்தமிழர் விடுதலைப்போர் உள்ளிட்ட தமிழர் உரிமைகளுக்கு பலப் போராட்டங்கள் தமிழ் மாணவர்கள் நடத்தியிருந்தாலும், "தைப்புரட்சி" என்ற தமிழர் புரட்சியை முன்னெடுத்த மாபெரும் வரலாற்றுப் பாத்திரம் இன்றையத் தமிழ் மாணவர்களுக்கே இருக்கிறது.

அடையாளப் போராட்டம் நடத்தாமல், விளம்பரப் போராட்டம் நடத்தாமல், பிரமுகத்தனம் காட்டாமல், இலட்சியத்தை மட்டுமே முன்னிறுத்திப் போராடிய மாணவர்களின் நேர்மையும் ஒழுக்கமும் தமிழ் மக்களை ஈர்த்தது. மாணவர் போராட்டமாக முகிழ்த்தது, பெற்றோரும் பங்கேற்ற மாபெரும் தமிழர் வெள்ளமாக மலர்ந்தது.

மக்களின் ஆற்றலுக்கு எல்லையில்லை. அவர்கள் நடத்தும் போராட்ட வடிவங்களுக்கும், ஆதரவுச் செயல்பாட்டு வடிவங்களுக்கும் அளவில்லை என்பதை இப்போராட்டத்தில் மாணவர்களும் மக்களும் காட்டினார்கள்.

### தலைமை இல்லாப் போராட்டமா?

இம்மாபெரும் தைப்புரட்சியைத் தலைமை இல்லாப் போராட்டம் என்று ஊடகத்தார் குறிப்பிட்டனர். வெளித்தோற்றத்திற்கு அப்படித்தான் தெரிந்தது. ஆனால் தான் பெற்ற பிள்ளைகளின் போராட்டத்திற்குத் தமிழன்னைதான் தலைமை தாங்கினாள்; அதாவது தமிழ்மொழி வழி பெற்ற தமிழின உணர்வுதான் தலைமை தாங்கியது.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் ஆசான்கள், சான்றோர்கள், வீரர்கள், மாமன்னர்கள் நடத்திய வாழ்வும் வழங்கிய சிந்தனைகளும் வாழையடி வாழையாய் தமிழர்களுக்கு இன உணர்ச்சியையும், அறச்சிந்தனைகளையும், போர்க் குணத்தையும் வழங்கி வருகின்றன. வற்றாத அந்த வரலாற்றுத் தொடர்ச்சியே இன்றைய தைப்புரட்சிக்குத் தலைமை தாங்கியது!

தைப்புரட்சியில் எழுந்த தமிழர் எழுச்சி காட்டாற்று வெள்ளமாய்க் காணாமல் போய்விடும் என்று சிலர் கணிக்கிறார்கள். அப்படிக் காணாமல் போய்விட வேண்டும் என்று தமிழினப் பகைவர்களும் வஞ்சகர்களும் ஆசைப்படுகிறார்கள்.

ஒரு சமூக நெருக்கடியில் எழுந்த மக்கள் கொந்தளிப்பு அலை சாதாரண காலத்திலும் அப்படியே நீடிக்கும் என்று எதிர்பார்ப்பது கற்பனைவாதம்! அது பின்வளர்ச்சியின்றி அடிச்சுவடு தெரியாமல் மறைந்து விடும் என்று கருதுவது அகநிலைவாதம்! அல்லது எதிரிகளின் எதிர்பார்ப்பு!

தைப்புரட்சி இளைஞர்களே, மாணவர்களே! உங்களைச் சுற்றி வளைக்கப் பலர் வட்டமிடுவார்கள்! நீங்கள் உங்கள் சொந்த அறிவாற்றல் கொண்டு தேர்வு செய்யுங்கள்! நீங்கள் யாரையோ பின்பற்றுவதற்கு மட்டுமே பிறந்தவர்கள் அல்லர். வழிகாட்டவும் பொறுப்புடைய வர்கள்; உரிமை உடையவர்கள்!

இசவாதிகளிடம் எச்சரிக்கையாக இருங்கள்! எந்த இசத்திலும் உள்ள முற்போக்கான கருத்துகளை, சமகாலத்திற்குத் தேவையான கருத்துகளை தமிழர் உளவியல் ஏற்கும்; ஆனால் அதில் தன்னைக் கரைத்துக் கொள்ளாது.

தத்துவம் வழிகாட்டவும் செய்யும், வழி மறிக்கவும் செய்யும்!

தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சி, சிறு சிறு தேசிய இனங்களின் அடையாளங்களை உலக அரங்கில் கொண்டு வந்துள்ளது. பெருந்தேசிய இன ஆதிக்கத்தில் சிக்கிக் கொண்ட சிறு தேசிய இனங்கள் விடுதலை பெற உந்துவிசை அளித்து வருகிறது தகவல் தொழில்நுட்பப் புரட்சி!

இரசியப் பேராதிக்கத்திடமிருந்து 14 தேசிய இனங்கள் பிரிந்தன. பிரித்தானியாவில் ஆங்கிலேயப் பேராதிக்கத்திலிருந்து பிரிந்திட அயர்லாந்தும் ஸ்காட்லாந்தும் நேரம் பார்த்துக் கொண்டுள்ளன. இந்தோனேசியாவிலிருந்து கிழக்குத் திமோர், எத்தியோப்பியாவிலிருந்து எரித்திரியா பிரிந்தன. கனடாவிலிருந்து கியூபெக், ஸ்பெயினிலிருந்து கட்டலோனியா, பாஸ்க், சீனாவிலிருந்து திபெத், உய்கூர் ஆகிய தேசிய இனங்கள் விடுதலை கோருகின்றன.

நாம் தமிழ்நாட்டில் மட்டும் எட்டுக்கோடி பேர் இருக்கிறோம் இந்தியாவின் இதர மாநிலங்களில் இரண்டு கோடிப் பேர் இருக்கலாம். உலகில் மொத்தம் 12 கோடித் தமிழர்கள் மக்கள் தொகை வாழ்கிறோம். பிரித்தானியா, பிரான்சு தமிழ்நாட்டு மக்கள் தொகையைவிட அதிகம்!

உலகத்தின் இன்றையப் போக்கு தேசிய இன இறையாண்மையை உறுதிப்படுத்துவதுதான். உலகமயம் என்ற பெயரில் வேட்டையாடும் பன்னாட்டு நிறுவனங்களை எல்லை கட்டி வெளியே தள்ள தேசிய இனத் தாயக உரிமையும், தாயக வரலாற்று பண்பாட்டு உளவியல் உணர்ச்சியும் மிகமிக இன்றியமையாதவை!

தமிழ்த்தேசிய இறையாண்மையே, பன்னாட்டு வேட்டை நிறுவனங்களை வெளியேற்றும்; தடுக்கும்! தமிழ்த்தேசிய இறையாண்மையே, தமிழ்நாட்டைத் தமிழர்களின் வாழ்வுரிமைத் தாயகமாக மாற்றும்! வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் தொழில், வணிகம், வேலை வாய்ப்பு ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்தி மண்ணின் மக்களாகிய தமிழர்களை தமிழ்நாட்டிலேயே இரண்டாம் தரக் குடி மக்களாக மாற்ற வருகிறார்கள். வெளியாரை வெளியேற்றினால் தமிழர் வாழ்வுரிமை பாதிக்கப்படும்.

தமிழ்த்தேசிய இறையாண்மையே, ஆரிய மொழிகளான சமற்கிருதம், இந்தி ஆதிக்கத்திலிருந்து தமிழைக் காக்கும்!

தமிழ்த்தேசிய இறையாண்மையே, பொங்கல் விழா, திருவள்ளுவர் நாள், ஏறுதழுவுதல் போன்ற தமிழ்ப் பண்பாட்டுரிமைகளைக் காக்கும்.

தமிழ்த்தேசிய இறையாண்மையே, கச்சத்தீவு, கடல் உரிமை, காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு, பவானி உரிமைகளை மீட்கும்!

தமிழ்த்தேசிய இறையாண்மையே,பெப்சி, கோக்கோ கோலா, வியோ உள்ளிட்ட வெளிநாட்டு நிறுவனங்களை விரட்டும்; உள்நாட்டு மரபு உற்பத்திகளை வளர்க்கும்! மண்ணுக்கேற்ற புதுமைகளைப் படைக்கும்!

தமிழர் அறம் மனித சமத்துவத்தை நிலைநாட்டும்!

தைப்புரட்சியில் தமிழர்களாக ஒருங்கிணைந்த இந்து, முசுலிம், கிறித்துவ மக்கள் ஒற்றுமையைத் தமிழ்த்தேசியமே வளர்க்கும்; சாதியைப் பின்னுக்குத் தள்ளி தமிழராய் ஒருங்கிணைந்த இன உணர்ச்சியைப் பெருக்கும்! ஆணும் பெண்ணும் சமமாய்க் களம் கண்ட தைப்புரட்சியில் சமத்துவத்தைத் தமிழ்த்தேசியமே தொடரும்; தலைவன் தலைவி என்ற சங்ககால சமத்துவத்தை மேலும் மேன்மைப்படுத்தும்!

இந்தியன், திராவிடன் என்ற அயல் இன ஆதிக்கப் புனைவுகளைப் புறந்தள்ளுங்கள்! தமிழராய்த் தலை நிமிருங்கள்!

**“தமிழன்டா!”** ■

கி.வெங்கட்ராமன்

மின்னுவதெல்லாம் பொன்னல்ல. முற்போக்காக தோற்றம் காட்டுவதெல்லாம் முற்போக்கும் அல்ல! தேர்தலில் மதத்தைப் பயன்படுத்துவது குறித்து, அண்மையில் வெளிவந்துள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்பும், இத்தகைய ஒன்றே!

**அபிராம் சிங்** எதிர் **சி.டி. கோமச்சன்** என்ற வழக்கில், உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்பு ஆயம், கடந்த 02.01.2017 அன்று தீர்ப்பு வழங்கியது. மராட்டிய மாநிலத்தில், சட்டமன்றத் தேர்தல் குறித்து எழுந்த வழக்கு இது!

இது போன்ற வேறு சில வழக்குகளையும் ஒன்றாக இணைத்து விசாரித்த உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டி.எஸ். தாக்கூர் தலைமையிலான அரசமைப்பு ஆயம், மக்கள் பேராளுமை சட்ட (The Representation of the People Act) விதி 123 (3)க்கு விளக்கம் அளித்துத் தீர்ப்பு வழங்கியது.

நீதிபதிகள் டி.எஸ். தாக்கூர், மதன் லோக்கூர், எஸ்.ஏ. பாப்தே, எல். நாகேசுவரராவ் ஆகிய நால்வரின் பெரும் பான்மை முடிவாக இத்தீர்ப்பு வெளிவந்தது. அரசமைப்பு ஆயத்தின் மற்ற மூன்று நீதிபதிகளான ஆதர்ஷ்குமார் கோயல், உதய் உமேஷ் லலித், டாக்டர். டி.ஓய். சந்தரச்சூட் ஆகியோர் மாற்றுக் கருத்துகள் கொண்ட முடிவை வழங்கினர்.

இந்தியாவின் "மக்கள் பேராளுமைச் சட்டம்", அது பிறப்பிக்கப்பட்ட 1951லிருந்து பல்வேறு திருத்தங்களைக் கண்டிருக்கிறது. அந்த வகையில் இச்சட்டத்தின் பிரிவு 123இல், 1961ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தமே இப்போதுள்ள 123 (3), 123 3A ஆகியன.

தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளரோ, அவரது முகவரோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற வேறொருவரோ வேட்பாளரின் ஒப்புதலோடு வாக்காளரிடம் வாக்குகள் பெறவோ அல்லது எதிர் வேட்பாளருக்கு வாக்களிக்காதவாறு இருக்கவோ சாதி, மதம், இனம், சமூகம் அல்லது மொழி ஆகியவற்றைப் பயன்படுத்தினால், அது முறையற்ற செயல், தண்டனைக்குரிய குற்றம் என 123 (3) கூறியது.

இச்சட்டத்தின் முந்தைய வரைவில், சாதி - மதம் - மொழி போன்றவற்றை மேற்சொன்ன காரணங்களுக்காக "திட்டமிட்ட முறையில்" (Systematic) பயன் படுத்தினால், முறையற்ற செயல் (Corrupt Practice) என்று கூறப்பட்டி ருந்தது. 1961ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தில், "திட்டமிட்ட முறையில்" என்பது



# சமத்துவத்தின் பெயரால் சமத்துவம் மறுப்பு

நீக்கப்பட்டது. அதே நேரம், சாதி - மதம் - மொழி - இனம் ஆகிய தொடர் களுக்கு முன்னால் “அவரது” (His) என்ற சொல் சேர்க்கப்பட்டது.

அதாவது, “அவரது சாதி மதம் - மொழி - இனம் - சமூகம் போன்றவற்றைப் பயன்படுத்தி, வாக்கு கேட்டால் அது முறையற்ற செயல்“ என மாற்றம் பெற்றது.

இங்கு குறிப்பிடப்படும் “அவரது“ (His) என்ற சொல், வேட்பாளரைக் குறிக்குமா அல்லது வேட்பாளரை யும் - எதிர் வேட்பாளரையும் மட்டும் குறிக்குமா அல்லது வேட்பாளர், எதிர் வேட்பாளர், வாக்காளர் ஆகிய அனைவரையும் குறிக்குமா என்பதே இத்தீர்ப்பின் மையப்புள்ளியாக மாறியது. மக்கள் பேராளுமை சட்டத்தின் 123 - 3A பிரிவும் இத்துடன் சேர்த்து விவாதிக்கப்பட்டது.

“மதம், சாதி, மொழி, இனம், சமூகம் ஆகியவற்றின் அடிப்படை யில் இந்தியக் குடிமக்களின் பல்வேறு பிரிவினரிடையே பகைமை யையோ கசப்புணர்வையோ தூண்டி னாலோ அல்லது தூண்ட முயன் றாலோ அது முறையற்ற செயலா கும்“ என 3A கூறுகிறது.

**இந்திய ஒற்றைத் தன்மையைத் திணிப்பது மிகக் கொடிய ஒடுக்குமுறை ஆகும். இதைத்தான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு செய்கிறது; ஒற்றுமை என்ற பெயரால் செய்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வர வேண்டும் எனக் கோருவதே, இத் தீர்ப்பின் வழியாகத் தடை செய்யப்படுகிறது. இது அயலார் ஆதிக்கத்திற்கு ஆக்கிரமிப்புக்கு வாயில் திறக்கும் தீர்ப்பாகும்; தமிழர் தாயகத்தையே அழிக்கும் முயற்சி ஆகும்.**

அது முறையற்ற செயல் என்றும் அவ்வாறு முறையற்ற செயலில் ஈடுபட்டு வெற்றி பெற்றால், அத் தேர்தல் செல்லாது என்பதோடு அவர்கள் ஆறாண்டுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என இத் தீர்ப்பு வந்தபோது, இதனை இந்துத் துவாவுக்கு எதிரான முற்போக்குத் தீர்ப்பு என்று பலரும் கொண்டாடி னர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் அனைத் திந்தியப் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி, வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பு என குதூகலித்துக் கொண்டாடி னார்.

இத்தீர்ப்பையும், இதில் விவாதிக் கப்படும் 123 (3), 123 - 3A ஆகிய வற்றின் வரலாற்றையும் உற்று நோக்கினால், இதிலுள்ள குழப்பம் தெரியும்.

கடைந்தெடுத்த இந்தி வெறிய ரான இலால் பகதூர் சாத்திரி தலைமை அமைச்சராக இருந்த போது வந்த முக்கிய சட்டத் திருத் தங்களுள் ஒன்று இது! இன் னொன்று, இந்தியத் தண்டனைச் சட்டத்தில் புகுத்தப்பட்ட பிரிவு 153A.

பிரிவு 123 (3), 123 - 3A ஆகியவற்றின் கீழ் முறையற்ற செயலில் ஈடுபடும் வேட்பாளர்கள் மற்றும் அவரது முகவர்கள், இச்சட்டத்தின் பிரிவு 8A இன்படி தகுதி இழப்புக்கு உள்ளாகிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால் அத்தேர்தல் செல்லாது என்பதோடு அவர்கள் எந்த சட்டமன்ற - நாடாளுமன்றத் தேர்தலிலும் ஆறாண்டுக்குப் போட்டியிட முடியாது.

இவ்வளவு கடும் ததண்டனையை விதிப்பதால்தான் இப்பிரிவுகள் முகாமை பெறுகின்றன. அது மட்டுமின்றி, மராட்டியத்தில் சிவசேனை வேட்பாளர் ஒருவர், “இந்துத்துவா” கோட்பாட்டை முன் வைத்து தேர்ந் தெடுக்கப்பட்டது செல்லாது என தொடுக்கப்பட்ட வழக்கில், மூன்று நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, “இந்துத்துவா என்பது இந்திய வாழ் நெறியைக் குறிக்குமே அன்றி, மத இன வெறியைக் குறிக்காது” என விளக்கமளித்திருந்ததால், அதன் மேல் முறை யீட்டிலான இந்த வழக்கும் கவனத்தைப் பெற்றது.

இச்சூழலில், மதம் - சாதி - மொழி - இனம் ஆகிய வற்றைப் பயன்படுத்தி தேர்தலில் போட்டி யிட்டால்,

இந்தியாவின் பல்வேறு பகுதி களில் மொழி, தேசிய இன உணர்வு மேலோங்கி போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது! இந்தப் பின்னணியில்தான், 1961இல் இந்த இரண்டு திருத்தங்களும் வருகின்றன.

முதலில், 1961 ஆகத்து 5ஆம் நாள் - 153A நாடாளு மன்றத்தில் முன் வைக்கப்பட்டு நிறை வேறுகிறது. அதை அடியொற்றியே, 123 (3), 123 - 3A ஆகிய திருத்தச் சட்டங்கள் மக்கள் பேராளுமை சட்டத்தில் உருவாக்கப் படுகின்றன. எனவே, இரண்டிலும் ஒத்த தன்மையுள்ள சொற்றொடர்கள் இடம் பெற்றிருக்கின்றன.

அன்றைக்கு நாடாளுமன்றத்தில், 153Aவை முன்வைத்து பேசும் போது இலால் பகதூர் சாத்திரி, “மொழி வழிப் பிரிவினை உணர்வு“ முதன்மை ஆபத்தாக முன் வந்துள்ளது என்று கூறினார். தமிழ்நாட்டில் மொழி உணர்வைத் தீவிரமாகப் பேசி வளர்ந்து வந்த தி.மு.க., 1957இல் முதன் முறையாக தேர்தலில் போட்டியிட்டபோது, பெரிய வெற்றியை ஈட்டியது. பஞ்சாப், ஒரிசா, ஆந்திரா உள்ளிட்ட பல பகுதிகளில் மொழி உணர்வை முன்வைத்த அமைப்புகள் வளர் முகமாக இருந்தன.

இதை எதிர் கொள்வதற்கே 153A என்ற அடக்கு முறைப் பிரிவு சேர்க்கப்பட்டது. அது கூறுவதாவது :

“153A : மதம், இனம், பிறப்பிடம், வாழிடம், மொழி போன்றவற்றின் அடிப்படையில் பல்வேறு குழுக் களுக்கு இடையே பகைமையை தூண்டுவது மற்றும் நல்லிணக்கப் பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கும் செயலில் ஈடுபடுவது,

யாரொருவர்,

(a) மதம், இனம், பிறப்பிடம், வாழிடம், மொழி, சாதி அல்லது வகுப்பு அல்லது வேறு எந்த அடிப்படையிலாயினும் பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட சொற்கள் வாயிலாகவோ, அல்லது குறி யீடுகள் வாயிலாகவோ, அல்லது கண்ணுறக் கூடிய குறிப்புகள் வழியாகவோ அல்லது வேறு வகையிலோ, பல்வேறு மத, இன, மொழி அல்லது பிரதேச குழுக் களுக்கிடையிலோ அல்லது சாதிகளுக்கிடையிலோ, அல்லது சமூகங்களுக் கிடையிலோ, பகைமை எண்ணங் களையோ இணக்கக் குலைவையோ, வெறுப்பையோ அல்லது கசப்பையோ உருவாக்கினாலோ அல்லது உருவாக்க முனைந்தாலோ

(b) அல்லது பல்வேறு மத, இன, மொழி அல்லது பிரதேச குழுக்களுக் கிடையேயோ, அல்லது சாதிகளுக் கிடையே, அல்லது சமூகங்களுக் கிடையேயோ, இணக்கத்தைப் பாதுகாப்பதற்குப் புறம்பான செயலில் ஈடுபட்டாலோ, அவரது செயல் பொது அமைதிக்கு ஊறு விளைவித்தாலோ, அல்லது ஊறு விளைவிக்கும் வாய்ப்பு இருந் தாலோ, அவர் மூன்றாண்டு சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனை வழங்கப்படுவார்“.

இந்தப் பிரிவு 153A, மொழி உரிமை, தேசிய இன உரிமை, ஒடுக்கப் பட்ட சாதிகளுக்கான உரிமை குறித்த கருத்துகளுக்கும் போராட் டங் களுக்கும் எதிராகப் பயன்படுத் தப்பட்டதே பெரும்பாலான நேரங் களில் நிகழ்ந்தது.

தமிழ்த்தேசியப் பேரியக்கத்திற்கே அதற்கு நிறைய பட்டறிவு உண்டு.

எடுத்துக்காட்டாக, மண்டல் குழு பரிந்துரை நாடாளுமன்றத்தில் வைக்கப்படாமல் காலம் கடத்தப் பட்டபோது, அப்பரிந்துரையை நாடாளுமன்றத்தில் வைத்து, சட்டமாக நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பேரியக்கம் (அன்று தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி) வலியுறுத்தி, தொடர் கூட்டங்களை நடத்தியது. இதற்காக அக்கூட்டங்களில் உரையாற்றிய தோழர் கி.வெ. உள்ளிட்ட முன்னணித் தோழர்கள் மீது, சாதிகளுக்கிடையே நல்லிணக்கத்தைக் குலைத்ததாக 153Aஇன்கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டது.

மண்டல் குழு பரிந்துரை வெளியான பின்பு, அதனைச் செயல்படுத்த வலியுறுத்தி தமிழ்த்தேசியப் பேரியக்கம் மறியல் போராட்டங்களை நடத்தியது. இதற்காக அன்றைய தஞ்சை மாவட்டச் செயலாளர் - மறைந்த தோழர் க. பழனிமாணிக்கம் உள்ளிட்ட தோழர்கள் மீது தஞ்சையிலும், தோழர் இராசேந்திர சோழன் உள்ளிட்ட தோழர்கள் மீது திண்டிவனத்திலும் 153கிஇன்கீழ் வழக்குத் தொடுக்கப் பட்டது.

கடந்த 2015ஆம் ஆண்டு, ஆந்திராவில் இருபது தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளான போது, தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில் “இந்தியாவை நம்பியதால் அனாதை ஆனோம், திராவிடத்தை ஏற்ற தால் ஏமாளி ஆனோம், தமிழ்த்தேசியமே தற்காப்பு ஆயுதம்!“ எனக் குறிப்பிட்டு, தமிழ்நாடு முழுவதும் சுவரொட்டி ஒட்டி னோம். அதற்காக, பேரியக்கத் தலைவர் தோழர் பெ.ம. மீது 153Aஇன் கீழ் வழக்குத் தொடுக்கப் பட்டது. திருச்சி மாநகரச் செய லாளர் தோழர் மூ.த. கவித்துவன் இதற்காக 153Aஇன் கீழ் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக் கப்பட்டார்.

ஆனால், எந்த இந்துத்துவா வாதியும் இப்பிரிவின் கீழ் நாட்டின் எந்தப் பகுதியிலும் கைது செய்யப் பட்டதில்லை! எந்த இந்துத்துவா வேட்பாளரும் 123 (3)இன் கீழ் பதவி நீக்கமோ, தகுதி நீக்கமோ செய்யப் படவில்லை.

அன்றைக்கு நாடாளுமன்றத்தில், 123 - (3)இன் திருத்தத்தை முன் வைத்துப் பேசிய அன்றைய சட்ட அமைச்சர் ஏ.கே. சென், இந்தியத் தண்டனைச் சட்டத்தில் செய்யப்பட்ட 153A திருத் தத்தை அடியொற்றி இச்சட்டத்திருத்தம் முன்வைக்கப் படுகிறது என்று கூறினார்.

ஆயினும், அத்திருத்தத்தில் முன்வைக்கப்பட்ட “அவரது” (His) மதம் - சாதி - மொழி - இனம் - சமூகம் என்ற தொடர் கவனிக்கப்பட வேண்டியது.

“அவரது” என்பது தொடர்புடைய வேட்பாளர் அல்லது அவரது முகவர், மற்றும் எதிர் வேட்பாளர் ஆகியோரைத்தான் குறிக்குமே அன்றி, வாக்காளர் களை அல்ல என இந்த ஆயத்தின் மூன்று நீதிபதிகள் கூறுவது சரியானது.

“நான் இந்த மதத்துக்காரன் அல்லது இந்த சாதிக்காரன். எனவே, எனக்கு வாக்களியுங்கள்“ அல்லது, “எதிர் வேட்பாளர் இந்த மதத்துக்காரர் அல்லது இந்த சாதிக்காரர். எனவே, அவரைத் தோற்கடியுங்கள்“ என்று குறிப்பிட்டு பரப்புரை செய்வதைத்தான் “முறையற்ற செயல்“ என இத்திருத்தச்சட்டம் வரையறுக்கிறது.

அதாவது, வேட்பாளர் அவரது சாதி, மதம் போன்றவற்றை குறிப்பிட்டு வாக்குக் கேட்பதைத்தான் குற்றச்செயலாகக் குறிப்பிடுகிறது. மாறாக, ஒட்டு மொத்த வாக்காளர்களின் சாதி, மதம், மொழி, இனம், சமூகம் போன்றவற்றைக் குறிப்பிட்டு வாக்குக் கேட்பதை இப்பிரிவு தடை செய்யவில்லை.

எந்த மக்களும் மொழி, இனம், மதம் போன்ற அடையாளமின்றி பொதுவாக இருப்பதில்லை. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தளவில், சாதி அடையாளமும் தவிர்க்க முடியாமல் இருக்கிறது. இவை, வெறும் அடையாளம் மட்டுமின்றி, அதை யொட்டி பாகுபாடுகளையும், ஒடுக்குமுறைகளையும், ஆதிக்கத்தையும், அந்தந்தப் பிரிவினரைப் பொறுத்து வழங்குகிறது. அது தொடர்பான சமூக இயக்கங்களும் நடைபெறுகின்றன. இவை, தேர்தலிலும் எதிரொலிப் பது தவிர்க்க முடியாதது.

இந்த அடையாளச் சமூகங்களுக்கு அப்பால் அல்லது சமூக அடையாளங்களைப் புறந்தள்ளி அமைப்புகளும், கட்சிகளும் இயங்குவது அரிது!

தேர்தல் அரசியலின் ஊடாக கிடைக்கும் அதிகார வாய்ப்புகளும் அந்தந்த சமூகங்களுக்கு முக்கியமானவை என்பதால், கட்சிகளின் பரப்புரைகளில் அவை இடம் பெறுவது தேவையாகிறது.

நடைபெறும் வர்க்கச் சுரண்டலானது, பொருளியல் ஆதிக்கமானது இந்த அடையாளச் சமூகங்களுக்கு எதிரான ஒடுக்குமுறையுடன் இணைந்தும், அவற்றின் ஊடாகவும் நடக்கிறது.

மொழி தாயக வழி தேசிய இனச் சமூகங்கள் மீதான ஒடுக்குமுறைதான் பெரும்பாலான காலகட்டங் களில், முதன்மையானதாகத் திகழ்கிறது. அதன் ஊடாகவும், அத்துடன் இணைந்தும் வர்க்கச் சுரண்டல் உள்ளிட்ட பிற அனைத்து வகை ஒடுக்குமுறைகளும் நிகழ்கின்றன.

ஆரிய இனவெறி - இந்துத்துவா மோடி ஆட்சியில் மேற்சொன்ன அனைத்து வகை ஒடுக்குமுறைகளும் தீவிரம் பெற்றுள்ளன. அவற்றிற்கு எதிரான மக்கள் போராட்டங்களும் கூர்மை அடைந்து வருகின்றன. இவை தேர்தல் அரசியலில் வெளிப்படுவது தவிர்க்க முடியாதது.

எடுத்துக் காட்டாக, மோடி அரசு இப்போது முன் வைத்துள்ள கல்விக் கொள்கை சமசுகிருத ஆதிக்கம், இந்தி ஆதிக்கம், ஒடுக்கப்பட்ட சாதி - மத சமூகங் களுக்கும், பெண்களுக்கும் கல்வி மறுப்பு, கல்வி பன்னாட்டு தனியார் மயம், மாணவர் - ஆசிரியர் உரிமை மறுப்பு ஆகிய அனைத்தையும் கொண்டுள்ளது.

பாதிக்கப்படும் அனைத்துப் பிரிவு மக்களும் தங்கள் தங்கள் பாதிப்புகளை முதன்மைப்படுத்தி இக்கல்விக் கொள்கையை எதிர்த்து வருகின்றனர். தமிழ்நாட்டில் தி.மு.க, அ.தி.மு.க. உள்ளிட்ட பெரும்பாலான கட்சிகள் இக் கல்விக் கொள்கைக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றன. தேர்தல் களத்திலும் இவை வெளிப்படுவது இயல்பு.

மொழி ஒடுக்குமுறைக்கு உள்ளான தேசிய இனம், தனது இன அடையாளத்தை - இன உரிமையைச் சொல்லிதான் பரப்புரை செய்ய வேண்டும்; போராட வேண்டும். பாதிக்கப்படும் சாதியினர் தங்களது சாதி உரிமையை முன்வைத்துதான் போராட முடியும். மதச் சமூக மக்களும் அவ்வாறே!

123 (3) மற்றும் 123 - 3A வழியாக இந்தச் சமூக இயக்கங்கள் தேர்தல் களத்திலிருந்து அப்புறப்படுத்தப் பட்டால், சமத்துவ உரிமைப் போராட்டங்களுக்கே தடை விதிப்பதாகும்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இதைத்தான் செய்கிறது. சமத்துவ நோக்கம் என்ற பெயராலேயே இத்தீமையைச் செய்கிறது.

அதுவும் தீவிர இந்தியத்தேசியம் - இந்தியப் பொதுத் தன்மை என்ற பெயராலேயே அனைத்துவகை ஒடுக்கு முறைகளும், ஒதுக்குமுறைகளும் நிகழ்த்தப் படுகின்ற சூழலில், மக்கள் சமூகத்தின் பன்மைத்தன்மை களையும், பன்மை உரிமைகளையும் வலியுறுத்துவது தான் சமத்துவத்திற்கான போராட்டம் ஆகும்.

இந்திய ஒற்றைத் தன்மையைத் திணிப்பது மிகக் கொடிய ஒடுக்குமுறை ஆகும். இதைத்தான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு செய்கிறது; ஒற்றுமை என்ற பெயரால் செய்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வர வேண்டும் எனக் கோருவதே, இத் தீர்ப்பின் வழியாகத் தடைசெய்யப்படுகிறது. இது அயலார் ஆதிக்கத்திற்கு ஆக்கிரமிப்புக்கு வாயில் திறக்கும் தீர்ப்பாகும்; தமிழர் தாயகத்தையே அழிக்கும் முயற்சி ஆகும்.

“வளர்ந்துள்ள புதிய சமூக நிலைமைக்கு ஒத்த முடிவு“ என்ற பெயரால், மக்கள் பேராளுமைச் சட்டத் தின் 123 (3) மற்றும் 123 - 3A ஆகிய பிரிவுகளுக்கு மனம் போன போக்கில், பெரும்பான்மை நீதிபதிகள் விளக்கமளித்துத் தீர்ப்பு எழுதி உள்ளனர்.

“சட்டத்திற்கு விளக்கம் அளிப்பது“ என்ற பெயரால், சட்டம் இயற்றும் நாடாளுமன்ற அதிகாரத்தையே நீதிமன்றம் கையில் எடுத்துக் கொள்ளும் செயல்” என்று மூன்று நீதிபதிகள் கொண்ட சிறுபான்மையினர் கூறியுள்ள திறனாய்வு சரியானது!

மக்கள் ஒற்றுமை, சமத்துவம், முற்போக்கு என்ற முகமூடி அணிந்து வந்துள்ள இத்தீர்ப்பு சமத்துவப் போராட்டங்களுக்கு எதிரான இன்னொரு அடக்கு முறை ஆகும். ■



# தடைகளைத் தகர்த்து ஏறுதழுவல்

ஆரியத்தின் வடிவமான இந்திய அரசு தனது விலங்குகள் நல வாரியத்தின் மூலமும், பன்னாட்டு முதலாளிகளின் பீட்டா என்ற தனியார் அமைப்பு மூலமும் இணைந்து செயல்பட்டு, பல்லாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த தமிழர்களின் வீர விளை யாட்டான “சல்லிக்கட்டு” எனப்படும் ஏறுதழுவ லுக்கு இந்திய உச்ச நீதிமன்றத்தில் தடை பெற்றுள்ளன.

இந்தியாவின் இத்தடைக்கு எதிராக தமிழ்நாடெங் கும் காளைகளென மாணவர்களும் இளைஞர்களும் சீறி வரும் நிலையில், தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மக்கள் தன்னெழுச்சியாக ஆங்காங்கு ஏறுதழுவல் விழாக்களை நடத்தி வருகின்றனர்.

**கொடியாலத்தூர்**

நாகப்பட்டினம் மாவட்டம், வலிவலம் அருகி லுள்ள கொடியாலத்தூர் பகுதியில், 13.01.2017 அன்று காலை, தமிழக இயற்கை உழவர் இயக்கம் மற்றும் காவிரி உரிமை மீட்பு குழு சார்பில், தடையை மீறி ஏறுதழுவல் நடத்தப்பட்டது. தமிழக இயற்கை உழவர் இயக்கத்தின் மாநில பொதுச் செயலர் திரு. நெல். செயராமன் தலைமை வகித்தார். தமிழ்த் தேசியப் பேரியக்க ஒன்றியத் துணைச் செயலாளர் தோழர் சை. செந்தில்குமார், தோழர் சை. செயபால், தமிழக உழவர் முன்னணி செயற்குழு உறுப்பினர் தோழர் இரா. தனபாலன் உள்ளிட்ட பேரியக்கத் தோழர்கள் முன்னிலை வகித்தனர்.

ஏறுதழுவலுக்கென அழைத்து வரப்பட்ட காளைகள் வழிபாட்டுக்குப் பின்னர் அவிழ்த்து விடப்பட்டது. அங்கு திரண்டிருந்த 20க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் அவற்றை அடக்க முற்பட்டனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற மாடுபிடி வீரர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சி குறித்து தகவலறிந்து அங்கு வந்த வலிவலம் காவல்துறையினர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தோழர் கண்ணன் அவர்களைக் கைது செய்து, தடையை மீறி சல்லிக்கட்டு நடத்தியதாக இந்தியத் தண்டனைச் சட்டம் 144, 145 ஆகிய இரு பிரிவுகளின் கீழ், அவர் உள்ளிட்ட 9 தோழர்கள் மீது வழக்குப்பதிவு செய்தனர். பின்னர் அவரை விடுதலை செய்தனர்.

**சென்னை**

ஏறுதழுவல் மீதான தடையை நீக்கக் கோரியும், காளைகளைக் காக்க வேண்டுமென வலியுறுத்தியும்,




சென்னையில் தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில், காளைகளுடன் மக்கள் பேரணி நடைபெற்றது.

சென்னை - பல்லாவரம் அருகிலுள்ள பொழிச்சலூரில், மாட்டுப் பொங்கலான 15.01.2017 அன்று காலை நடைபெற்ற இப்பேரணிக்கு, தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் க. அருணபாரதி தலைமை தாங்கினார். பேரியக்கத்தின் தென்சென்னை செயலாளர் தோழர் மு. கவியரசன் முன்னிலை வகித்தார்.

பேரணியின் தொடக்கத்தில், காளைகளுக்கு மாலையிட்டு ஆரத்தி எடுத்து ஊர் மக்கள் வணங்கினர். இதனையடுத்து, சென்னை போன்ற பெரு நகரத்தில், காளைகளை அழியாமல் பாதுகாத்து வளர்த்து வரும், மாடு வளர்ப்போருக்கு மரியாதை செலுத்தும் வகையில், தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுக்குழு உறுப்பினர் தோழர் பழ.நல். ஆறுமுகம் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்தார்.

இதனையடுத்து, விநாயகா நகரின் வீதிகளில் சென்ற பேரணியில் இளைஞர்களும், மாணவர்களும் என நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்றனர். "ஏறுதழுவல் எங்கள் உரிமை!", "இந்தியாவே தடையை நீக்கு!", "தடை செய் தடை செய், பீட்டாவை தடை செய்!", "எச்சரிக்கை எச்சரிக்கை இந்தியாவுக்கு எச்சரிக்கை" என்பன உள்ளிட்ட பல்வேறு முழக்கங்களை எழுப்பியபடி தோழர்கள் வீதி வீதியாகச் சென்ற போது, காளைகளுக்கு பொது மக்கள் ஆரத்தி எடுத்து வரவேற்று வணங்கி மகிழ்ந்தனர்.

பேரணியை நிறுத்தக் கோரியும், முழக்கம் எழுப்பக் கூடாதென்றும் பொழிச்சலூர் காவல்துறையினர் வந்து எச்சரித்த போது, தோழர்களுடன் இணைந்து ஊர் மக்கள் காவலர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதனைப் பொருட்படுத்தாமல், முழக்கங்கள் எழுப்பிக் கொண்டே தோழர்கள் பேரணியை நடத்தினர்.




பேரணியில், தமிழ்த் தேச மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் தமிழ்நேயன், தமிழ்நாடு மாணவர் நடுவம் ஒருங்கிணைப்பாளர் தோழர் ஜோ. பிரட்டோ, ஊடகவியலாளர் திரு. இருதயராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுக்குழு உறுப்பினர் தோழர் இரா. இளங்குமரன், தோழர்கள் வி. கோவேந்தன், மு.வெ. இரமேசு, தமிழக இளைஞர் முன்னணித் தோழர் வீரத்தமிழன், தமிழ்க் கலை இலக்கியப் பேரவை பாவலர் முழுநிலவன் உள்ளிட்ட திரளான பேரியக்கத் தோழர்களும், ஊர் மக்களும் பேரணியில் கலந்து கொண்டனர்.

**ஏறுதழுவல் உரிமைக்காகப்போர்க்களமான தமிழ்நாடு!**

ஏறுதழுவலுக்கான இந்திய அரசின் தடையை நீக்கக்கோரி, தமிழ் நாடு போர்க்கோலம் பூண்டது.

அலங்காநல்லூரில் இரவு முழுவதும் வாடிவாசல் அருகேயே அமர்ந்து அறவழியில் போராடிய மாணவர்



திருச்சி

களையும் இளைஞர்களையும் 17.01.2017 அன்று காலை 6.30 மணியளவில், தமிழ்நாடு காவல்துறையினர் இழுத்துச் சென்று பலவந்தமாகக் கைது செய்தனர். அவர்களை விடுதலை செய்யக்கோரி, அலங்காநல்லூரில் பொது மக்கள் தொடங்கிய எழுச்சிமிகுப் போராட்டம், தமிழ்நாடெங்கும் தீப்பொறியாக பற்றியது.



குடந்தை

ஏறுதழுவலை நடத்த வேண்டுமென்ற ஒற்றைக் கோரிக்கையுடன், சென்னை மெரினா கடற்கரையிலும், கோவை, நெல்லை, தஞ்சை, புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அறவழியில் ஒன்றுகூடிப் போராடினர்.

தன்னெழுச்சியான இப்போராட்டங்களுக்கு ஆதரவுத் தெரிவித்து, தமிழ்நாடெங்கும் தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பிலும் போராட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நடந்தன.

**சிதம்பரம்**

இந்திய அரசைக் கண்டித்து, இந்தியத் தலைமை அஞ்சலகத்தை இன்று காலை மாணவர்கள் முற்றுகை யிட்ட

னர். போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்த்தேசியப் பேரியக்க நகரச் செயலாளர் தோழர் எல்லாளன், தமிழக இளைஞர் முன்னணித் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆ. குபேரன், தமிழக மாணவர் முன்னணி அமைப்பாளர் தோழர் வே. சுப்பிரமணிய சிவா உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

**திருச்சி**

திருச்சியில், தொடர்வண்டிச் சந்திப்பு அருகில், தமிழ்த்தேசியப் பேரியக்கத் திருச்சி மாநகரச் செயலாளர் தோழர் மூ.த. கவித்துவன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், தோழர் முகிலினியன் எழுச்சி முழக்கங்களை எழுப்பினார். தமிழக விவசாயிகள் சங்கத் திருச்சி மாவட்டத் தலைவர் திரு. ம.ப. சின்னத்துரை, வ.உ.சி. பேரவை தோழர் முருகராசன், வழக்கறிஞர் சுகுமார், தமிழக உழவர் முன்னணி இலால்குடி பொறுப்பாளர் திரு. நகர் செல்லையா உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

**பெண்ணாடம்**

கடலூர் மாவட்டம் பெண்ணாடத்தில், கிழக்குக் கடைத்தெருவிலிருந்து ஊர்வலமாக வந்த தோழர்கள், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் க. முருகன் தலைமையில் முதன்மைச் சாலையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பேரியக்கப் பொதுக்குழு உறுப்பினர் தோழர் அர. கனகசபை, தமிழக இளைஞர் முன்னணி நடுவண் குழு உறுப்பினர் தோழர் சி. பிரகாசு, தமிழக மாணவர் முன்னணி நடுவண் குழு உறுப்பினர் தோழர் மா. மணிமாறன், திருவள்ளுவர் தமிழர் மன்றச் செயலாளர் திரு. தி. ஞானப்பிரகாசம், தலைவர் திரு. மா. கார்த்திகேயன், தமிழக உழவர் முன்னணி செயற்குழு உறுப்பினர் தோழர் மு. இராமகிருட்டிணன், மாந்த நேயப் பேரவை திரு. பெ.ச. பஞ்சநாதன், மகளிர் ஆயம் தோழர் க. இந்துமதி உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**குடந்தை**

குடந்தையில், காந்திப் பூங்கா அருகில், தமிழ்த் தேசியப் பேரியக்க குடந்தை நகரச் செயலாளர் தோழர் க. விடுதலைசுடர் தலைமையில் நடைபெற்ற ஆர்ப் பாட்டத்தில், சாமிமலை கிளைச் செயலர் தோழர் க. தீந்தமிழன், குடந்தை செழியன், செந்தமிழன், அன்பு,


பெண்ணாடம்




ம. தமிழ்த்தேசியன் தேவராயன் பேட்டை புண்ணிய மூர்த்தி, தமிழக மாணவர் முன்னணி அருள் உள்ளிட்ட திரளான பேரியக்கத் தோழர்கள் பங்கேற்ற னர்.

**தண்டலச்சேரி**

சனவரி 18 அன்று, திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் தண்டலைச்சேரியில், ஏறுதழுவலுக்கான இந்திய அரசின் தடையை நீக்கக்



கோரி, திருவாரூர் திருத்துறைப்பூண்டி முதன்மைச் சாலையில் பொது மக்கள் பங்கேற்புடன், சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில், தமிழ்த் தேசியப் பேரியக்க ஒருங்கிணைப்பில் பேரியக்க ஒன்றியக்குழு உறுப்பினர் தோழர் சை. செயபால், தமிழக உழவர் முன்னணி செயற்குழு உறுப்பினர் தோழர் இரா. தனபாலன், தோழர் இரமேசு உள்ளிட்ட பேரியக்கத் தோழர்களும், உழவர் உரிமை இயக்கம் திரு. சி. செல்வராஜ், கோ. இராகவேந்திரன், வீரசிவபாதம், மா. மாதவன், மா. முருகானந்தம், இரா. வினோத், கருணாகரன், அருள் நெறி, விசயன், இசை வாணன் உள்ளிட்ட இளைஞர்களும் திரளாகப் பங்கேற்றனர்.

**புதுச்சேரி**

புதுச்சேரியில், நரேந்திர மோடி பன்னீர் செல்வம் சசிகலா கிரண் பேடி ஆகியோரின் நால்வரின் உருவப்படங்களும், நேற்று (17.01.2017) காலை தீ வைத்து எரிக்கப்பட்டன. புதுச் சேரி இராசா திரையரங்கம் அருகில் இந்நால்வரின் உருவப்படத்தையும் எரித்து நடைபெற்ற ஆர்ப் பாட்டத்தில், தமிழ்த்தேசியப் பேரியக்க புதுச்சேரி செயலாளர் தோழர் இரா. வேல்சாமி, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. இரா. அழகிரி, தமிழர் களம் புதுச்சேரி செயலாளர் தோழர் கோ. அழகர், தமிழ் தமிழர் இயக்கம் திரு. பிரகாசு, நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். போராட்டத்தைத் தொடர்ந்து, தோழர்கள் நால்வர் மீது காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

**ஓசூர்**

ஓசூரில், இராம் நகர் அண்ணா சிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், திரளான மாணவர் களும் இளைஞர்களும் பங்கேற்றனர். தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் கோ. மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர் தோழர் ப. செம்பரிதி உள்ளிட்ட பல்வேறு கட்சி இயக்கப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**தஞ்சை - செங்கிப்பட்டி**

சல்லிகட்டு தடையை நீக்க வலியுறுத்தியும் அவனியாபுரம் மற்றும் அலங்காநல்லூர் ஆகிய ஊர்களில் சல்லிகட்டு தடை நீக்க அறப்போராட் டம் நடத்திய மக்களின்மீது தடியடி நடத்தி கொடுமை புரிந்த காவல்துறை மீது நடவடிக்கை எடுக்க வலுயுறுத்தி 18.01.2017 அன்று காலை 11.00 மணியளவில் தஞ்சை மாவட்டம் பூதலூர் சாணூரப்பட்டியில் தமிழ்த் தேசியப் பேரிக்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் குழ.பால்ராசு தலைமை தாங்கி னார், ஆர்ப்பட்ட நோக்கங்களை வலியுருத்து ஒன்றியச் செயலாளர் ஆ. தேவதாசு, மற்றும் மகளிர் ஆயம் மைய குழு உறுப்பினர் ம. இலட்சுமி ஆகியோர் உரையாற்றி னார்.





தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் பழ. இராசேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் தோழர் ரெ. கருணாநிதி, திருச்சி மாநகரச் செயலாளர் தோழர் கவித்துவன், தஞ்சை மாநகரச் செயலாளர் தோழர் இலெ. இராமசாமி ஆகியோர் பங்கேற்றனர் ஆண் களும், பெண்களுமாக திரளானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துக் கொண்டனர். தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ.மணியரசன் நிறைவுரையாற் றினார்.

**தஞ்சை வருமானவரி அலுவலகத்தைப் பூட்டி முற்றுகை!**

**தமிழ்த்தேசியப் பேரியக்கத் தோழர்கள் ஆவேசம்!**

சல்லிக்கட்டு தடை நீடிக்கக் காரணமாக உள்ள மோடி அரசைக் கண்டித்தும், தடை செய்யப்பட்ட விலங்குப் பட்டியிலிருந்து காளையை நீக்கிட வலியுறுத்தியும், பன்னாட்டுக் குற்றக் கும்பலான பீட்டாவை வெளியேற்றிட கோரியும், உடனடியாக நடுவணரசு அவசரச் சட்டம் இயற்றி ஏறுதழுவலை தமிழ்நாட்டில் அனுமதிக்க வலியுறுத்தி யும் 20.1.2017 அன்று காலை 10.30 மணிக்கு தஞ்சை நாஞ்சிக் கோட்டை சாலையிலுள்ள நடுவரண ரசின் வருமான வரி அலுவலகத்தைப் பூட்டி தமிழ்த்தேசியப் பேரியக்கத் தோழர்கள் முற்றுகை இட்டனர்.

தமிழ்த்தேசியப் பேரியக்க தஞ்சை மாவட்ட செயலாளர் தோழர் குழபால் ராசு தலைமையில் நடந்த முற்றுகைப் போராட் டத்தில் தலைமைச் செயற் குழு உறுப்பி னர்கள் தோழர்கள் பழ. இராசேந்திரன், நா. வைகறை, க. விடுதலைச்சுடர், பொதுக்குழு உறுப்பினர்கள் தோழர்கள் இராசு. முனியாண்டி, க. காமராசு, பூதலூர் ஒன்றியச் செயலாளர் தோழர் ஆ. தேவதாசு, தஞ்சை மாநகரச் செயலாளர் தோழர் இலெ. இராம சாமி, மகளிர் ஆயம் நடுவண் குழு உறுப்பினர் தோழர் ம. லெட்சுமி, பூதலூர் ஒன்றியச் செயலாளர் தோழர் இராசப்பிரியா, தஞ்சை நகரத் தோழர் சரசுவதி தமிழ்ச் செல்வன், உள்ளிட்ட 75 பேர் முற்று கைப் போராட்டத்தில் கலந்து கொண் டனர்.

முதலில், வருமானவரி அலுவலக வளாகத்திற்குள் அனைவரும் உள்ளே புகுந்து, நுழைவு வாயில் கதவைப் பூட்டினர். அதன்பின் அலுவலக வராந் தாவில் அமர்ந்து முழக்கங்கள் எழுப்பி னர். உள்ளே பணியாற்றிக் கொண்டி ருந்த அலுவலர்கள், ஊழியர்கள், பின் வாசல் வழியாக வந்து வேடிக்கை பார்த் தனர்.

“இந்திய அரசே இனப்பகை அரசே! சல்லிக்கட்டு தடை நீக்கு!“, ‘தடை செய்யப்பட்ட விலங்குப் பட்டியலி லிருந்து காளையை நீக்கு!“, “மோடி அரசே! சல்லிக் கட்டை அனுமதிக்க அவசரச் சட்டம் உடனே கொண்டுவா!“, “அதிமுக அரசே! அரைகுறை வேலை செய்யாதே! தில்லிக்குக் கங்காணி ஆகாதே!” என்பன உள்ளிட்ட முழக்கங்களை ஆவேசமாக எழுப்பினர்.

அரைமணி நேரம் கழித்துத் தஞ்சை மாவட்ட கண்காணிப்பாளர் திரு மகேசு தலைமையில் அதிரடிப் படையினர் வந்தனர். முற்றுகை நடத்திய வீரர்களும், வீராங்கனைகளும் அஞ்சாமல் முழக்கமிட்டனர்.

கைது செய்ய காவல்துறையினர் முயன்றபோது “எங்கள் தமிழ்நாட்டில் எங்கள் பண்பாடு காக்கப் போராடுகிறோம்! எதற்காகக் கைதாக வேண்டும்? முடி யாது என்றனர். காவல்துறையினர் விலகிக் கொண்ட னர்.



முற்றுகை தொடர்ந்து நடந்தது. பின்னர் அங்கிருந்து அனைவரும் முழக்கமிட்டு ஊர்வலமாகப் புறப்பட்டு தொடர்வண்டி நிலையம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்திக் கலைந்தனர்.

■

# நீ கேட்டான் விடைகள்

**காளை தழுவல் விளையாட்டை உச்சநீதிமன்றம் தடை செய்திருப்பது இந்தியா முழுமைக்குமா? தமிழ்நாட்டிற்கு மட்டுமா? ஆந்திராவில் சல்லிக்கட்டு கடந்த ஆண்டும் நடந்தது, இந்த ஆண்டும் நடந்தது. அது எப்படி?**

ஏறுதழுவலுக்கான உச்சநீதிமன்றத் தடை இந்தியா முழுமைக்கும்தான்! சேவல் சண்டைத் தடையும், ரேக்ளா தடையும் அப்படித்தான்!

மற்ற மாநிலங்களில் எல்லாம் மாநில உரிமைக் காப்பிற்கான தலைவர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் தரகர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் அவனியாபுரத்திலும், அலங்காநல்லூரிலும் சல்லிக் கட்டு தடை நீக்கக் கோரி முழுக்கம் எழுப்பிய இளைஞர்கள் மற்றும் மக்கள் மீது காவல் துறையை ஏவித் தடியடி நடத்தியது தமிழ்நாடு அரசு. சல்லிக்கட்டு நடந்து விடாமல் தடுத்திட வன்முறையை ஏவிவிடும் அரசு தமிழ்நாட்டில் இருக்கிறது.

**சல்லிக்கட்டு தடையை நீக்கிட வலியுறுத்தி சென்னைக் கடற்கரையில் கூடி முழக்கமிட்ட மாணவர்களைப் பார்த்து ஆதரவு தெரிவிக்கச் சென்ற தி.மு.க. செயல்தலைவர் ஸ்டாலினை அவர்கள் திருப்பி அனுப்பியது நல்ல பண்பா?**

ஒரு தமிழராக வாருங்கள்; கட்சித் தலைவராக வராதீர்கள் என்று பண்புடன்தான் மாணவர்கள் கூறியிருக்கிறார்கள். சரி, ஒருகோடிக்குமேல் உறுப்பினர் களை வைத்திருக்கும் தி.மு.க, தானே முன்வந்து இது போன்ற மாபெரும் மக்கள் திரள் போராட்டங்களை நடத்தலாமே!

**பீட்டாவைத் தடை செய் என்பதை முதன்மை முழக்கமாக மாணவர்கள் எழுப்புகிறார்கள் இது சரியா?**

தமிழர்களின் சீற்றம் தன்பக்கம் திரும்பாமல் இருக்க பாசகவினர் திருப்பிவிட்ட முழக்கம் இது.

பீட்டா என்ற வெளிநாட்டு அமைப்பை இந்தியா வில் உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்பது முற்றிலும் சரி! அதே வேளை காட்சிப்படுத்திடத் தடை செய்யப்பட்ட விலங்குப் பட்டியலில் இருந்து காளையை நீக்க வேண்டிய பொறுப்பு நரேந்திர மோடி அரசுக்கு இருக்கிறது. இதனை பாசக அரசு செய்தால், உச்சநீதிமன்றத் தீர்ப்பை மாற்றிவிட முடியும். இந்திய அரசு அவசரச் சட்டம் போட்டாலும் செல்லுபடி யாகும்!

முதல் முழக்கம் மோடி அரசே தடைப்பட்டியலி லிருந்து காளையை நீக்கு! இரண்டாவது முழக்கம், பீட்டாவை வெளியேற்று என்பதாக இருக்க வேண்டும்.

பீட்டா என்பது உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட்ட ஓர் அமைப்பு. அதுவே தடைச் சட்டம் இயற்றிய அமைப்பு இல்லை. பீட்டா போட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் தடை வழங்கியது.

**அ.இ.அ.தி.மு.க.வின் தலைமையை தீபா ஏற்க வேண்டும் என்று அன்றாடம் அ.இ.அ.தி.மு.க.வில் ஒரு பிரிவினர் அவர் வீட்டில் சென்று பணிந்து விண்ணப்பித்துக் கொண்டுள் ளார்களே! இச்செயல் தமிழர் பெருமைக்கு இழிவில்லையா?**

தமிழர் பெருமை ஒரு பக்கம் இருக்கட்டும். மனித மாண்புக்கே இழுக்கு! மனித மாண்புகள் பற்றிய உணர்ச்சி தன்மான உணர்ச்சியிலிருந்து பிறப்பது.

தன்மானத்தை விற்று சன்மானம் வாங்கும் “பண்பை” செயலலிதா ஊக்குவித்ததால், செயலலிதா வின் உடன் பிறவா உடன்பிறப்பு இப்போது மனித மாண்புக்கெடுப்பு கொற்றத்தை நடத்திக் கொண்டிருக் கிறார். பழைய கால்களில் விழுவதைவிட புதிய கால்களில் விழுவதில் கவர்ச்சி இருக்கலாம்; போட்டிக் குழுவினரின் தேடலாகவும் இருக்கலாம்.

அ.இ.அ.தி.மு.க. மட்டுமல்ல, தமிழ்நாட்டில் தி.மு.க., பாமக, விடுதலைச் சிறுத்தைகள், ம.தி.மு.க. போன்ற ஒரு நபர் தலைமைக் கட்சிகளில் அடுத்த நிலைத் தலைவர்கள், அந்தக் காலத்தில் தி.மு.க.வில் இருந்தது போல் இப்பொழுது யாருமே இல்லை. அடுத்த நிலைத் தலைவர்கள் வளர்வதையும் பொதுவாகத் தலைவர்கள் விரும்புவதில்லை. எனவே அரசியலில் எசமானத் தலைவர்கள் உருவாகி விட்டார்கள். பழைய எசமானிக் குப் பதிலாக புதிய எசமானியைத் தேடுகிறார்கள் தமிழர்கள்!

தலைவர்களின் எதேச்சதிகாரத்தை மாற்ற முடியாது. எசமானத் தலைமை தேடும் தமிழர்கள்தான் தன்மான உணர்வு பெறவேண்டும். தலைவர் பற்று வேறு; எசமான விசுவாசம் வேறு! தலைவர் பற்று மக்கள் நலம் சார்ந்தது. எசமான விசுவாசம் தன்னலம் சார்ந்தது!

**பவானி ஆற்றின் குறுக்கே நான்கு தடுப்பணைகள் கட்டத் தொடங்கிவிட்டது கேரளம். அப்படிக் கட்டி முடித்து விட்டால், கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களுக்குக் குடிநீர் கூட கிடைக்காதே! பாவனியின் குறுக்கே கேரள அரசு அணைக்கட்டுவதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?**

1. தமிழ்நாட்டு உரிமைகளைக் காக்கும் அக்கறை யுள்ள பெரிய அரசியல் தலைமைகள் தமிழ்நாட்டில் இல்லை. 2. தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்கள் தமிழ்நாட்டிற்கெதிராக எடுக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளை இந்திய அரசு மறைமுகமாக ஆதரிக்கிறது 3.தமிழ்நாட்டின் ஞாயத்தை ஏற்று உச்சநீதி மன்றம் தீர்ப்புச் சொன்னாலும் அண்டை



**காவிரி உரிமைப் பறிப்பில் வராத எழுச்சி, உழவர்கள் சாவில் வராத எழுச்சி இப்பொழுது காளைத் தழுவல் தடையை எதிர்த்து வந்துவிட்டதே அது எப்படி?**

நூறாவது வெட்டில் ஒரு மரம் சாய்கிறது என்றால் அந்த நூறாவது ஒரு வெட்டு மட்டும் மரத்தைச் சாய்த்து விடவில்லை. தொண்ணூற்றொன்பது வெட்டுக்களின் பலன் நூறாவது வெட்டில் வெளியே தெரிகிறது.

அப்படித்தான் காவிரி, கச்சத்தீவு, கடல் உரிமைப் பறிப்பு, பாலாறு, முல்லைப் பெரியாறு, மீத்தேன், கெயில் குழாய்ப் பதிப்பு, 20 தமிழர்களை ஆந்திரம் கட்டி வைத்துச் சுட்டுக் கொன்றது என எல்லாவற்றிலும் நடுவரணரசின் இனப்பாகுபாடு காரணமாக பாதிக்கப் பட்டனர் தமிழர்கள்.

இவ்வாறு ஏற்பட்ட தமிழர் உளவியல் அழுத்தம் பொங்கல் விழா பொது விடுமுறை மறுப்பில் தொடங்கி, சல்லிக்கட்டுத் தடை நீக்கப் போராட்டத்தில் தமிழ்நாடு தழுவிய பேரெழுச்சியை உருவாக்கிவிட்டது.

**சல்லிக்கட்டு உரிமைக்குப் போராடும் மாணவர்கள் அரசியல் தலையீட்டை எதிர்ப்பது சரியா?**

இப்பொழுதுள்ள கங்காணி அரசியலை எதிர்ப்பது சரி! ஆனால் சரியான தமிழ்த் தேசிய அரசியலை அவர்கள் உள்வாங்க வேண்டும்; வளர்க்க வும் வேண்டும். இல்லையேல் காட்டாற்று வெள்ளம் போல் தற்காலிக எழுச்சியாக இப்போராட்டம் மறைந்து விடும்!

மாநிலங்கள் அத்தீர்ப்பைச் செயல்படுத்த மாட்டா! தமிழ்நாட்டிற் குரிய தனது தீர்ப்பை தொடர்புடைய மாநிலம் நிறைவேற்ற மறுத்தால் அதை உச்சநீதிமன்றம் கண்டிக் காது. நீதிமன்ற அவமதிப்பு வழக்குப் போடாது. தனது பழைய தீர்ப்பையே உச்சநீதிமன்றம் கைவிட்டு விடும்!

இவற்றையெல்லாம் காவிரி சிக்கலில் கண்டறிந்த கேரளம் தெம்புடன் பவானியில் அணைகள் கட்டுகிறது.

காவிரித் தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பில் கட்டுப் பட்ட, காவிரித்துணை ஆறு பவானி! காவிரித்தீர்ப் பாயத் தீர்ப்பு தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களையும், புதுவை துணைநிலை மாநிலத்தையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் படைத்தது. கேரளம் பவானியில் புதிதாக அணைக்கட்டுவது காவிரித் தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்புக்கு எதிரானது. எதிரானது என்று நாம் எழுதி ஏட்டுச்சுரைக்காயாக வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டுத் தமிழர்கள் பவானி ஆற்று நிலைமையைப் பாதுகாக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.

கேரளா அரசு பவானியில் அணைகள் கட்டினால் “தமிழ்நாட்டில் 1956க்கு பின் குடியேறி வாழும் மலையாளிகள் அனைவரும் ஒரு வாரத்திற்குள் தமிழ்நாட்டை விட்டு வெளியேற வேண்டும்” என்று கெடு விதித்துத் தமிழ் அமைப்புகள் கட்டளை இடவேண்டும். வன்முறையற்ற வழியில் அதை செயல்படுத்த வேண்டும்!

**ஏறுதழுவுதல் என்று தமிழ் இலக்கியத்தில் கூறப்படுவதை உச்சநீதி மன்றத்தில் எடுத்துக் கூறியிருந்தால் சல்லிக்கட்டுக்கு தடை வந்திருக்காது. குழந்தையைத் தழுவுவதுபோல், காதலியைத் தழுவுவதுபோல் காளையை தழுவுகிறோம் என்று சொல்லியிருக்க வேண்டும் என்று கவிஞர் வைரமுத்து கூறியிருக்கிறாரே, அது சரியா?**

காட்சிப் படுத்த தடைவிதிக்கும் விலங்குப் பட்டியலில் காளையை சேர்த்துள்ள இந்திய அரசு சூதாட்டப் பந்தயத்தில் குதிரை துன்புறுத்தப்படுகிறது, அந்தக் குதிரை பந்தயத்திற்கு தடைவிதிக்கவில்லை. காளை தமிழர் சின்னம், குதிரை ஆரியச் சின்னம். தமிழர் இன அடையாளங்களை, உரிமைகளை, அழிக்கின்ற அல்லது மறுக்கின்ற ஆரியத்தின் சூழ்ச்சிதான் சல்லிக் கட்டுத் தடை.

ஆரிய ஆதிக்க அரசாக உள்ள இந்திய அரசு சல்லிக் கட்டு தடைக்கான அடித்தளமிட்டுள்ளது என்பதை கண்டிக்க கவிஞர் வைரமுத்துவின் விருது மனம் இடம் கொடுக்கவில்லை.

அவர் திராவிட அரசியலில் கற்றுக் கொண்ட பாணியில் இந்திய அரசு நோகாமல், தமிழர்கள் பக்கம் இருப்பதுபோல் காட்டிக் கொள்வதற்காக பயன்படுத்திய “நழுவல்” சொல்தான் “தழுவல்”.



# மொழிப்போர் ஈகியர் வீரவணக்க நிகழ்வுகள்




1938 – 1965ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தித் திணிப்பை எதிர்த்து நடந்த தமிழ் மொழிக் காப்புப் போரில், நஞ்சுண்டும், தீக்குளித்தும் மடிந்த ஈகியருக்கு வீர வணக்கம் செலுத்தும் மொழிப்போர் ஈகியர் நாளான 25.01.2017 அன்று, தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில், மொழிப்போர் ஈகியருக்கு வீர வணக்க நிகழ்வுகள் தமிழக மெங்கும் நடைபெற்றன.

**சென்னை**

தமிழகத் தலைநகர் சென்னை வள்ளலார் நகர் – மூலக்கொத்தளம் இடுகாட்டில் உள்ள மொழிப்போர் ஈகியர்கள் நடராசன் – தாளமுத்து – பேராசிரியர் தர்மாம்பாள் ஆகியோரது நினைவிடங்களில், காலை 10.30 மணியளவில், தமிழுரி மைக் கூட்டமைப்புத் தலைவர்



புலவர் கி.த. பச்சையப்பனார் தலைமையில், பேரணியாகச் சென்று வீரவணக்கம் செலுத்தப்பட்டது. தமிழுரிமைக் கூட்டமைப்புச் செயலாளர் தோழர் காஞ்சி அமுதன் வீரவணக்க முழக்கங்களை எழுப்பினார். தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் க. அருணபாரதி, பொதுக்குழு உறுப்பினர்கள் தோழர் பழ.நல். ஆறுமுகம், தோழர் இரா. இளங்குமரன், மகளிர் ஆயம் நடுவண் குழு உறுப்பினர் தோழர் ம. இலட்சுமி, தமிழக இளைஞர் முன்னணி சென்னைத் தலைவர் தோழர் வெற்றித் தமிழன், தென்சென்னை த.தே.பே. செயலாளர் தோழர் மு. கவியரசன் உள்ளிட்ட திரளான பேரியக்கத் தோழர்களும், பல்வேறு அமைப்பின் பொறுப் பாளர் களும் பேரணியில் பங்கேற்றனர்.

**சிதம்பரம்**

கடலூர் மாவட்டம் – சிதம்பரம் அண்ணாமலை நகரில் உள்ள மொழிப் போர் மாணவ ஈகி இராசேந் திரன் சிலைக்கு தமிழக மாணவர் முன்னணி சார்பில் வீரவணக்கம் செலுத்தப் பட்டது. நிகழ்வுக்கு தமிழக மாணவர் முன்னணி அமைப்பாளர் தோழர் சுப்பிர மணிய சிவா தலைமை தாங்கினார். தமிழ்த் தேசியப் பேரியக்க சிதம்பரம் நகரச் செயலாளர் தோழர் எல்லாளன், ஈகி இராசேந்திரன் சிலைக்கு மாலை அணிவித் தார். மூத்த தோழர் ம.கோ. தேவராசன், தோழர்கள் சரண், கார்த்திகேயன் உள்ளிட்ட திரளான பேரியக்கத் தோழர்கள் பங்கேற்றனர்.

**திருச்சி**

திருச்சியில், தென்னூர் உய்யகொண்டான் ஆற்றங் கரையில் அமைந்துள்ள மொழிப்போர் ஈகியர்






கீழப்பழூர் சின்னசாமி – விராலிமலை சண்முகம் ஆகியோர் நினைவிடங்களிலும், காவிரிக்கரையில் அமைந் துள்ள சின்னசாமி சிலைக்கும் தமிழ்த்தேசியப் பேரியக்கம் திருச்சிக் கிளை சார்பில் மாலை அணிவித்து மலர் தூவி வீர வணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்விற்கு மாநகரச் செயலாளர் தோழர் மூ.த. கவித்துவன் தலைமை யேற்றார். தமிழறிஞர்கள் வீ.ந.சோ, பழ. தமிழாளன், ஐயா. மனுவேல், தமிழக விவசா யிகள் சங்கத் திருச்சி மாவட்டத் தலைவர் திரு. ம.பா. சின்னத்துரை, தமிழ்க் கலை இலக்கியப் பேரவை நடுவண் குழு




உறுப்பினர் பாவலர் நா. இராசாரகுநாதன், மு.வ. இரத்தினம், இராமராசு, வெள்ளம்மாள், தி.மா. சரவணன், இனியன் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

### செங்கிப்பட்டி

தஞ்சை மாவட்டம் – பூதலூர் ஒன்றியம், செங்கிப் பட்டியில் தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில், பேரியக்கத் தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் குழ. பால்ராசு தலைமையில், மொழிப்போர் ஈகியர் படங்களுக்கு மலர் தூவி வீரவணக்கம்



செலுத்தப்பட்டது. ஒன்றியச் செயலா ளர் தோழர் ஆ. தேவதாசு, தமிழக இளைஞர் முன்னணி நடுவண் குழு உறுப்பினர் தோழர் பி. தெட்சிணாமூர்த்தி உள்ளிட்ட திரளா னோர் பங்கேற்றனர்.

### முருகன்குடி

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் வட்டம் – முருகன் குடியில் நடைபெற்ற மொழிப் போர் ஈகியர் வீரவணக்க நிகழ்வுக்கு, பேரியக்கக் கிளைச் செயலாளர் தோழர் அரா. கனகசபை தலைமைத் தாங்கினார். தலைமைச்



செயற்குழு உறுப்பினர் தோழர் முருகன் அவர்கள் மொழிப்போர் குறித்து விளக்கிப் பேசினார். இந்நிகழ்வில் தமிழக இளைஞர் முன்னணி நடுவண்குழு உறுப்பினர் தோழர் சி.பிரகாசு, தமிழக மாணவர் முன்னணி நடுவண்குழு உறுப்பினர் மா.மணிமாறன், திருவள்ளு வர் தமிழர் மன்றத் தோழர் சு.சரத்குமார், மகளிர் ஆயம் சார்பில் நடுவண்குழு உறுப்பினர் மு.வித்யா உள்ளிட்ட திரளான பேரியக்கத் தோழர்கள் பங்கேற்றனர்.

### தருமபுரி

தருமபுரி, இந்திய அரசுத் தொலைப்பேசி இணைப் பகம் அருகில் நடைபெற்ற மொழிப் போர் ஈகியர் வீர வணக்க நிகழ்வுக்கு, பேரியக்க செயலாளர் தோழர் க. விசயன் தலைமை தாங்கினார். பேரியக்கத் தோழர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

### திருத்துறைப்பூண்டி

திருவாரூர் மாவட்டம் – திருத்துறைப்பூண்டி – காமராசர் சிலை அருகில் தமிழ்த்தேசியப் பேரியக்க ஒன்றியச் செயலாளர் தோழர் ப. சிவவடிவேலு தலைமையில் நடை பெற்ற மொழிப்போர் ஈகியர் வீரவணக்க நிகழ்வில், மொழிப் போர் ஈகியர் படங்களுக்கு மலர் தூவி வீரவணக்கம் செலுத்தப் பட்டது. நிகழ்வில், ஒன்றியத் துணைச் செயலாளர் தோழர் சை. செந்தில்குமார், சை. செயபால், கா. அரசு, து. இரமேசு, சி. இசை வாணன், கா. பாலசுப்பிர மணியன், கா. சிந்தனைச் செல்வன், ச.போ. முருகையன், இ. மோகன்தாசன், ஞானசேகரன் உள்ளிட்ட பேரியக்கத் தோழர்கள் பங்கேற்றனர்.

***மொழிப்போர் ஈகியருக்கு வீரவணக்கங்கள்!***

■

பெ.மணியரசன்

# "இன்குலாப் மக்கள் பாவலர் மட்டுமல்ல தமிழ்த்தேசியப் பாவலரும் ஆவார்!"

திருச்சியில் கடந்த 16.12.2016 அன்று, தமிழ்க் கலை இலக்கியப் பேரவை சார்பில் நடைபெற்ற, மக்கள் பாவலர் இன்குலாப் அவர்களின் நினைவேந்தல் கூட்டத்தில், தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் ஆற்றிய உரையின், செழுமைப் படுத்தப்பட்ட எழுத்து வடிவம் :

"மறைந்த மக்கள் பாவலர் இன்குலாப் அவர்களுக்கு வணக்கம் செலுத்தும் வகையில் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள தோழர்களே, கலை இலக்கியப் படைப்பாளிகளே, நண்பர்களே, தோழர்களே, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பாவலர் இன்குலாப் அவர்கள், மக்களுக்காகப் பாடல்கள் எழுதி மறைந்த, "மக்கள் பாவலர்". அவர் உடல் நலிவுற்ற போது, தாம் இறந்தால் தம் உடலை செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டுமெனச் சொல்லிச் சென்றார். அவ்வாறே அவரது உடல் மருத்துவக் கல்லூரிக்கு ஒப்படைக்கப்பட்டது.


அவர் பிறந்த மதப்படி அவருக்கு எந்தச் சடங்கும் செய்யப்படவில்லை. மதச்சடங்கில்லாமல் தம் இறப்புக்குப் பிந்தைய நிகழ்வுகள் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். மருத்துவக்கல்லூரிக்குத் தம் உடலை ஒப்படைக்கச் சொன்னதன் மூலம் அவர் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டார்.

தொழிற்சங்கப் போராட்ட இயக்கமும், இடதுசாரிக் கருத்துகளும் ஓங்கி ஒலித்த 1970களின் தொடக்கத்தில், கவிஞர் இளவேனில் நடத்தி வந்த "கார்க்கி" ஏட்டில் தான், நான் முதன் முதலாக பாவலர் இன்குலாப்பின் கவிதையைப் படித்தேன்.

அப்போது, சிம்சன் தொழிற்சங்கப் போராட்டம், கலைஞர் கருணாநிதி அரசால் கடுமையாக ஒடுக்கப் பட்டது. அதன் தொடர்ச்சியாக தோழர் வி.பி. சிந்தன் அவர்கள் கத்தியால் குத்தப்பட்டதும் நடந்தது.

அந்தப் போராட்டம் குறித்த பாவலர் இன்குலாப் பின் கவிதை என்னை ஈர்த்தது. அதன் தலைப்பு, "நீங்கள் என்னை கம்யூனிஸ்ட் ஆக்கினீர்கள்". இதே தலைப்பில் மலையாளத்தில் ஒரு படம்கூட வெளிவந்து சிறப்பாக ஓடியது.

அந்தக் கவிதையில் பாவலர் இன்குலாப் கூறுகிறார்:



**"அது நேப்பியர் பூங்காவில் / நேற்று நடந்தது / அப்பொழுது இரவுப் பூக்கள் / இதயம் திறந்து / தென்றல் சொன்ன / செய்தியைக் கேட்டன / அவர்கள் / சிம்சன் தொழிலாளர் / இரத்தத் துளிகளை / நைவேத்யம் கேட்கும் / நவீன காலத்துக் / கோட்டை தெய்வங்களுக்கு எதிர்க்குரல் கொடுத்தார்கள் ...**

**சிந்தனைக் குளத்தில் / கேள்வித் தூண்டில் / விடியலில் வீட்டுக்கு / வெளியே வந்தேன் சுவரில் ஒரு / சினிமா போஸ்டர் / நீங்கள் என்னை / கம்யூனிஸ்ட் ஆக்கினீர்கள்.."**

அன்றைக்கு முற்போக்காளர்கள் இடையில் இந்தக் கவிதை பெரும் வரவேற்பைப் பெற்றது. தன் சமகாலத்தில் நடைபெற்ற தொழிலாளர் போராட்

டத்தை அவர் தம் கவிதை வரிகளில் பதிவு செய்தார். பாவலர் இன்குலாப் ஒரு நேர்மையான படைப்பாளி !

இராசீவ்காந்தி கொலை வழக்கில் அப்பாவித் தமிழர்களான பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று பேருக்குத் தூக்கு உறுதி செய்யப்பட்ட போது, இந்தியக் குடியரசுத் தலைவருக்குக் கடிதம் எழுத படைப் பாளிகளிடம் கையெழுத்து கோரப்பட்டது. அன்றைக்கு பிரபலங்களாக உள்ள பல படைப்பாளிகள் அரசுப் பதவியில் இல்லாத படைப்பாளிகள்கூட அதில் கையெழுத்திட மறுத்து விட்டனர். ஆனால், அரசு உதவி பெறும் கல்லூரியில் பேராசிரியராகப் பணி புரிந்த இன்குலாப், அதில் எந்தத் தயக்கமுமின்றி கையெழுத் துப் போட்டார். அவர் ஒரு நேர்மையான செயல் பாட்டாளர் !

பல்வேறு மனித உரிமைப் போராட்டங்களிலும், தமிழீழம் - தமிழ்வழிக் கல்வி என எத்தனையோப் போராட்டங்களிலும் ஈடுபட்டு, காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு எங்களுடன் எத்தனையோ தடவை அவர் மண்டபங்களிலே அடைக்கப்பட்டிருக்கிறார். இருப்பினும், அவருடைய உடல் அதற்கு ஒத்துழைக்க வில்லை. தொடர்ந்து அவருக்கு உடல் நலச் சிக்கல் இருந்தது. அதனுடன்தான் அவர், அதனைப் பொருட் படுத்தாமல் - போராட்டக்களத்திற்கும் வருவார்.

பாவலர் இன்குலாப் ஒரு மக்கள் படைப்பாளி யாகவே இருந்தார். கவிதை மட்டுமின்றி, உரைநடை, நாடகம் என மக்களுக்காகவே அவர் எழுதினார். சங்க இலக்கியத்தை நவீன நாடகமாக்கினார்.

பாவலர் இன்குலாப்பின் கவிதைகளை - கவிதை நடையை சிலர் அப்போதும் கேலி செய்தனர். இப் போதும் கேலி செய்கின்றனர். அதுபோல் கேலி செய்பவர்களுக்குப் பதில் தரும் விதமாக, அவர் ஒரு கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் எழுதினார்.

**“நமைச்சல் சிலருக்கு / சில நகங்கள் / சில பேனாக்களுக்கு / சொறிவது இயல்புதான்.. பரபர வெனச் சொறிவது பிரச்சாரம் / மவுனமாய் சொறிவது கலைஞானம் / விளிம்பிலிருந்து மையத்திற்கும் / மையத்திலிருந்து விளிம்பிற்கும் / அறிவுப்பூர்வமாய் சொறிவது அமைப்பியல் ஞானம்”** என்று நையாண்டி செய்தார்.

சிலருக்குத் தமிழைப் பற்றி பாடினால் தமிழரைப் பற்றிப் பாடினால் உடனே எரிச்சல் வருகிறது. ஒருமுறை கவிஞர் ஞானகூத்தன் சொன்னார், “எனக்குத் தமிழ்தான் மூச்சு / அதை பிறர் மேல் விடமாட்டேன்“. அந்தள விற்கு, தமிழ் - தமிழர் என்று பாடினாலே அபச்சாரம் என்று இன்றைக்கும் கருதுகின்ற பார்ப்பனப் படைப்பாளிகள் - பார்ப்பன உளவியலைத் தாங்கிய படைப்பாளிகள் இருக்கிறார்கள். ஞானக் கூத்தன் இன்குலாபை வக்கிரமாக விமர்சித்தார். அதற்கு எதிர்வினையாகவே மேலே சொன்ன பாடலை இன்குலாப் எழுதினார்.

பாவலர் இன்குலாப்பின் கவிதைகளை - எழுத்து நடையை திறனாய்வு செய்யக்கூடாது என்று நாம் சொல்ல வரவில்லை. திறனாய்வு என்ற பெயரில், கொச்சைப்படுத்தல்கள் இருக்கக் கூடாது என்றே நாம் கூறுகிறோம்.

நம் வள்ளுவப்பெருந்தகையைக்கூட நாம் திறனாய்வு செய்வதில் தவறில்லை. அவரேதான், “எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் / மெய்ப் பொருள் காண்ப தறிவு“ என்று கூறியிருக்கிறார். ஆனால், திறனாய்வு என்ற பெயரில் கொச்சைப் படுத்தல்கள் கூடாது.

நமக்கும் பாவலர் இன்குலாப்பின் சில கருத்துகளில், கவிதைகளில் திறனாய்வுகள் உண்டு. தமிழ்ப் பேரரசன் இராசராசன் குறித்து அவர் ஒரு இடதுசாரிப் பார்வையைக் கொண்டிருந்தார். அவர் உயிர் துறக்கும் கடைசிக் காலம் வரை அதை மாற்றிக் கொள்ளவில்லை என்பதையும் நானறிவேன்.

பாவலர் இன்குலாப் பேராசிரியராகப் பணியாற்றிய புதுக்கல்லூரி எதிரே செல்லும் பீட்டர் சாலையின் அருகே கோணிப்பைக் குடிசை ஒன்று. அதில் கொத்தனார் ஒருவரும் அவர் மகளும் குடியிருந்தனர். பெரும் அடைமழையில் அந்த கோணிப்பை குடிசைக்குள் ஓட்டைகள் வழியாக மழைநீர் கொட்டி தண்ணீர் தேங்கி நிற்கிறது. மார்கழி குளிர் வேறு; கொத்தனார் வீட்டில் இல்லை. பருவப் பெண்ணான அவர் மகள் ராஜம் மழையில் குளிரில் விரைத்து செத்துவிடுகிறாள். காலையில் இச்செய்தி பரவுகிறது. கல்லூரிக்குள் சென்று இல்குலாப் செய்தி அறிந்து நெஞ்சம் பதைக்கிறார்.

அத்துயரத்தை - அவர் நெஞ்சின் அவலத்தை - கவிதையாக்கினார். கவிதைத் தலைப்பு “கண்மணி ராஜம்!“ இக்கவிதையும் கார்க்கியில் வந்தது.

கண்மணிராஜம் மழையிலும் குளிரிலும் விறைத்துச் செத்த அக்காலத்தில் மாமன்னன் இராசராசன் சிலையை அவர் எழுப்பிய தஞ்சைப் பெரிய கோயிலுக்குள் நிறுவிட இந்தியத் தொல்லியல் துறை மறுத்துவிட்டதால் - அது குறித்த விமர்சனங்கள் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

பேரரசன் இராசராசன் சிலையை நிறுவியவர் அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதி!

இராசராசன் சிலையை அவன் எழுப்பிய பெரிய கோயிலுக்குள் வைக்க தில்லி அரசு அனுமதிக்காதது என்ன ஞாயம் என்று கருணாநிதி வினா எழுப்பி வந்தார்.

இந்தப் பின்னணியில் இன்குலாப் கண்மணி ராஜம் கவிதையை எழுதினார்.




**“தூக்கத்தை விடத் தொழுகை மேலானது**
**அல்லா பெரியவன்.. அல்லா பெரியவன்..”**

**நெருப்பு விரல்கள் நிலத்து வீணையில்**
**வெயிலை மீட்டும் வேளைக்கு முந்திய**
**கருக்கலில் அந்தக் கல்லூரிக்குள்ளே**
**மசூதியில் இருந்து அழைப்பு வந்தது.**

**வெளியே நீண்ட வீதி.. அது!**
**பீட்டர் சாலை.. பெரிய சாலை**

**ஆதத்தின் குழந்தைகள் அந்த காரத்தின்**
**கைதிகளாய் இன்னும் கண்மூடிக் கிடந்தனர்.**
**“தூக்கத்தை விடத் தொழுகை மேலானது..”**
**...**
**சாலை நனைந்தது ரிக்ஷா நனைந்தது**
**குதிரை நனைந்தது மாடு நனைந்தது**
**...**
**தஞ்சை நகரின் பெரிய கோயிலும்**
**மழையில் நனைந்தது.. வாசலில் நிற்கும்**
**ராஜராஜனின் மகோந்நதம் பேசும்**
**மாண்புகள் எல்லாம் மழையில் நனைந்த**
**ராஜராஜனின் சிலைக்காக வருந்தினர்**
**...**
**பெய்த மழையில் பெருகிய ஓடையில்**
**கண்மணி மேகத்தின் கண்ணீரும் கலந்தது**
**வாடைக் காற்றின் ஊதல் ஒலியில்**
**இந்தப்**
**பேதையின் பற்கடிப்பும் சேர்ந்து கலந்தது**
**அடுப்பெரியாத அந்தக் குடிசையில்**
**இவளின்**
**மேனிச் சூடு எத்தனை நாளைக்கு வரும்?**

**ராஜராஜனின் சிலைக்காக வருந்துகிறார்**
**ராஜராஜனின் சிலையின் உள்ளே**
**நரம்புகள் உண்டா?**
**நாளங்கள் உண்டா?**
**இதயத் துண்டிப்பை யேனும் கேட்டதுண்டா?**
**சிலையாகும் முன்னர் ஜீவித் திருந்த இம்மன்னன்**
**என்னத்தைச் செய்து கிழித்துவிட்டானாம்?**

இராசராசனின் சிலை வெளியில் நிறுவப்பட்டு வெயிலில் காய்கிறதே, மழையில் நனைகிறதே, குளிரில் நடுங்குகிறதே என்று கலைஞர் கருணாநிதி வாதிட வில்லை ஏனெனில் அவர்கள் நிறுவிய அண்ணா சிலை, பெரியார் சிலை எல்லாம் மேற் கூரையில்லாமல் திறந்த வெளியில் நிறுத்தப்பட்டவையே!

இங்கே என்ன கேள்வி எழுந்தது என்றால், தமிழ்ப் பேரரசன் கட்டிய அவரின் கோயிலுக்குள் அவன் சிலையை வைக்க உரிமை இல்லையா? தமிழ்நாடு அரசுக்கு அந்த அதிகாரம் இல்லையா? புதுதில்லி அதிகாரம்தான் இதையும் முடிவுசெய்யுமா என்பதே! இராசராசன் சிலைச் சிக்கல் இனமுரண்பாடாகத்தான் பேசப்பட்டது. தில்லி ஆதிக்கம் தமிழ்நாட்டில் நிலவுவது பற்றிதான் பேசப்பட்டது.

பழைய நினைவுச் சின்னங்கள் உள்ள இடங்களில் புதிய கட்டுமானம், புதிய சின்னம் எதையும் நிறுவக் கூடாது என்றார்கள். அப்படியென்றால் அக்கோயி லுக்குள் புதிதாக அலுவலகம் கட்டப் பட்டிருக்கிறதே அதை ஏன் அனுமதித்தீர்கள்! சமற்கிருதம் சார்பான புதிய புதிய வழிபாட்டு நிகழ்வுகள் புகுத்தப்படு கின்றனவே அதை எப்படி அனுமதித்தீர்கள்?

உலகம் வியக்கும் அரிய பொறியியல் நுட்பத்துட னும் கலைச் சின்னங்களுடனும் அப்பெரிய கோயிலை எழுப்பியவன் பேரரசன் இராசராசன் என்ற முறையில் அவன் சிலையை அங்கே வைத்திட தொல்லியல் துறை விதிவிலக்கு கொடுக்கக் கூடாதா என்பதே நமது கேள்வி!

இங்கு பேசிய பேராசிரியர் மு. சாதிக் பாட்சா அவர்களும், தோழர் செல்வராசு அவர்களும் இன்குலாபின் கண்மணிராஜம் கவிதையை எடுத்துக் காட்டி இராசராசச்சோழனைக் கடுமையாக விமர்சித்தார்கள். விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் யாருமில்லை. அதேவேளை பழங்கால நிகழ்வுகளை முழுமையாக நிராகரிக்கக்கூடாது.

"தமிழர்களே, உங்களுக்குப் பழம்பெருமை எதுவுமில்லை. மூட நம்பிக்கைகளும் ஆதிக்கங்களும் ஒடுக்குமுறையும் மட்டுமே உங்கள் வரலாறு" என்ற பாணியில் விமர்சனங்கள் அமையக் கூடாது. அவ்வாறான விமர்சனங்கள் தமிழர்களைப் பெருமித உணர்வற்று தற்சார்பற்று அண்டிப்பிழைக்கும் உளவியலில் தள்ளிவிடும்.

ஆரியமும் பார்ப்பனியமும் நம்மை வாளேந்தி வந்தா ஆக்கிமித்தார்கள்? இல்லை! இரண்டாயிரம் ஆண்டுகளாக அவர்கள், கவிதை - இலக்கியம் - கதைகள் என அறிவுத்துறையில் ஊடுருவித்தான் நம்மை அடிமைப் படுத்தினார்கள். ஆரியர்கள் தங்கள் முன்னோர்களின் பெருமிதத்தைக் கதைகளாகச் சொல்லி நம்மை நம்ப வைத்தார்கள்.

ஆனால் நாமோ, இராசராசன் பெருமை பேசக் கூடாது - திருக்குறளைப் பேசக்கூடாது - கரிகால் சோழனைப் பேசக்கூடாது என வரம்பிட்டுக் கொண்டால், இந்த இனத்திற்கு எப்படி ஒரு பெருமித உணர்வு வரும்? எப்படி இவர்களுக்கு மனத்துணிச்சல் வரும்?

மகாபாரதம் எழுதும்போது பகவத் கீதை இல்லை என்கின்றனர் ஆய்வாளர்கள். ஆக அவர்கள் பகவத் கீதையை புனைந்து எழுதினார்கள். அவை உண்மையா பொய்யா என யாரும் ஆய்வு செய்யவில்லை. மகாபாரதத்தில் வரும் கதைகளை - பாத்திரங்களை நம்பினார்கள். ஏற்றார்கள். பகவத் கீதை மூலம் பார்ப்பனியத்தை நிலைநாட்ட இன்றைக்கும் அவர்கள் முயல்கிறார்கள். இந்தக் கதைகள் மூலம்தான் ஆரியர்கள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் மேலாதிக்கம் செலுத்துகிறார்கள்.

ஆனால், நமக்கென்று சொந்தக் கதை என்ன இருக்கிறது?

ஒருவன் தாராளமாகப் பணம் கொடுத்தால் "பெரிய கர்ணமகாராசா" என எளிய மக்கள் பேசுகிறார்கள். தமிழினத்தில் வள்ளல் தன்மையில் சிறந்து விளங்கிய பாரி மன்னனைப் பேசாமல், அவர்கள் எப்படி ஆரிய மன்னனான கர்ணனைப் பேசுகிறார்கள்? இன்றைக்கும் "வில்லுக்கு அர்ச்சுனன்" என்று கூறுபவர்கள்தான் அதிகம். நம் தமிழினத்தில் வில் வித்தையில் சிறந்து விளங்கிய "வல் வில் ஓரி"யை எத்தனைப் பேருக்குத் தெரியும்? திரௌபதியைத் தெரிந்த அளவிற்குக் கண்ணகியைத் தெரியுமா?

தமிழ்க்கதைகள் எல்லாமே முட்டாள்தனம் - காட்டுமிராண்டித்தனம் எனக்கூறிவிட்டு, ஆரியக் கதைகளை மக்களிடம் விதைத்தார்கள். அதையே இங்கு பகுத்தறிவுவாதம் பேசியவர்களும் செய்தார்கள்.

குரங்கு பேசாது எனத் தெரிந்தும், இராமாயணக் கதையில் குரங்கு பேசுவதைப் போல் ஒரு சித்தரிப்பை ஏற்படுத்தி நம்மை நம்ப வைத்தார்கள். இது கதை சொல்லிகளின் ஒரு இலக்கிய உத்தி! இன்றைக்கு, மேற்குலகில் இதனை மாய எதார்த்தவாதம் (Magical Realism) எனக் கூறுகிறார்கள். அதாவது, தொன்மங்கள் வழியாக கதைகள் வழியாக நீதி கூறுவது. பெரும்பாலும் குடியேறிகளே வாழும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில், அவர்கள் தங்களுக்கென தொன்மங்கள் இல்லாத நிலையில், இந்த மாய எதார்த்தவாதத்தைக் கையாண்டு, நீதிக்கதைகளை மக்களுக்குச் சொல்கின்றனர். அவ்வாறு கதைகளின் மூலம், மக்களின் உளவியலில் பண்பாட்டை விதைக்கின்றனர். நீதியை விதைக்கின்றனர்.

ஆனால், இதனையெல்லாம் புரிந்து கொள்ளாமல், தமிழ் இலக்கியங்களை நகையாடிக் கொண்டு, ஆரிய இலக்கியங்களுக்கு தமிழ் மண்ணில் வழி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

சிலப்பதிகாரத்தில், கோவலனுக்குத் தவறாக தீர்ப்பு வழங்கிய பாண்டியநெடுஞ்செழிய மன்னன், "யானோ அரசன் யானே கள்வன்" என இறந்துவிடுவதாக இளங்கோவடிகள் கூறுகிறார்கள். "அப்படி உடனடியாக சாக முடியுமா" என்று நம்மை பதில் கேள்வி கேட்கிறார்கள். முடியாது போகலாம். ஆனால், இந்தக் கதையில் இளங்கோவடிகள் பாண்டிய மன்னனை சாகடித்திருக்கிறார். எதற்காக? "அரசன் தவறான தீர்ப்பு வழங்கினால் அவன் தண்டிக்கப்பட வேண்டும் என்ற அறத்தை வலியுறுத்துவதற்காக இளங்கோவடிகள் அச்சித்தரிப்பைப் பயன்படுத்தியிருக்கிறார்.

மனுநீதிச் சோழன் கதையில், மன்னனின் மகன் தேரோட்டிய போது, பசுவின் கன்றின் மீது தேரேற்றி அதைக் கொன்று விடுகிறான். தன் கன்றை இழந்த பசு, சோழ மன்னனின் அரண்மனை சென்று, மக்களின் குறைகளை - கோரிக்கைகளைத் தெரிவிப்பதற்காகக் கட்டப்பட்டுள்ள ஆராய்ச்சி மணியை அடித்து, தன் கன்றுக்கு நேர்ந்த அநீதியை எடுத்துரைக்கிறது. சோழமன்னன், தன்மகனைக் கிடத்தி அதே தேரை மகன் மீது ஏற்றிக் கொல்கிறான். கடவுள் தோன்றி மனுநீதிச் சோழனின் பாகுபாடற்ற நீதியைப் பாராட்டிப் பசுக் கன்றையும் மன்னன் மகனையும் உயிர்ப்பித்தான் என்று அக்கதை கூறுகிறது.

இதில் மன்னனுக்கும் மக்களுக்கும் ஒரே நீதி என்பதை இன்னும் நீட்டி, மன்னனுக்கும் பிற

உயிரினங்களுக்கும் இடையே ஒரே நீதியுடன் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான காட்சிப்படுத்தல்கள்தான் கதைச் சித்தரிப்புகள்தான் மக்கள் மனத்தில் தலைமுறை தலைமுறையாகப் பதியும், நீடிக்கும்.

சாதிக் கொடுமையை, சாதி ஒடுக்குமுறையை சகித்துக் கொள்ளாத போராளிப் படைப்பாளி இன்குலாப், "மனுசங்கடா, நாங்க மனுசங்கடா, உன்னைப் போல, அவனை போல எட்டு சாணு ஒசரமுள்ள மனுசங்கடா" என்ற இன்குலாப்பின் மனித உரிமை போர்ப்பிரகடனம் தோழர் கே. ஏ. குணசேகரன் இசை முழக்கமாக வந்த போது மனச்சான்றுள்ள மனிதர்களை அதிரச் செய்தது.

**"எந்த உழுகாளைக் கன்றும்**
**பூமியில் காலூன்றும் போதே**
**மூக்கணாங் கயிற்றோடு**
**பிறப்பதில்லை.**

**தாயின் கர்ப்பத்தில்**
**நாங்கள் சனித்த போதோ**
**நீங்கள் பின்னிய சாதிக் கயிறு**
**ஒரு கொப்பூழ்க் கொடிக்கும் முந்தி**
**எங்கள் கழுத்தைச் சுற்றியது.**

**நாங்கள் இறக்குமதி செய்யப்படாத**
**இந்திய நீக்ரோக்கள்"**

என்று சாதிக் கொடுமையை தீண்டாமைக் கொடுமையைச் சாடினார்.

நம்முடைய தமிழர் கண்ணோட்டம் இதழ் வெளியிட்ட ஒவ்வொரு பொங்கல் மலரிலும் பாவலர் இன்குலாபின் கவிதை கட்டாயம் இருக்கும்.

2016 சனவரி 24 அன்று மதுரையில் நாம் நடத்திய 1965 மொழிப்போர் 50ஆம் ஆண்டு நிறைவு மாநாட்டிற்குப் பாவலர் இன்குலாப் அவர்களை அழைத்தோம். அவர் உடல் அவ்வளவு தொலைவுக்கு வரும்படி அவரை அனுமதிக்கவில்லை.

நம் தோழர்கள் ஊரப்பாக்கம் சென்று அவரது இல்லத்தில், மொழிப்போர் 50 மாநாட்டிற்கான அவரது கவிதையைப் பேச வைத்து காணொலியாக எடுத்து வந்தார்கள். அதை மதுரை மாநாட்டில் திரைப் போட்டோம்!

1965 மொழிப்போரின் போது இன்குலாப் அவர்கள் மதுரை தியாகராசர் கல்லூரி மாணவர் அம்மொழிப் போரில் தீவிரமாகக் கலந்து கொண்டார். அதையெல்லாம் நினைவுகூர்ந்தும் அடுத்து என்ன செய்யவேண்டும் என்றும் இன்குலாப் அக்கவிதையில் எழுதியிருந்தார். அது தெளிவான தமிழ்த் தேசியக் கவிதையாகும். அப்பாடலின் சுருக்கம் :

**"காலத்தின் முதல் நொடியும் நகர்ந்த ஒரு நாள்**
**முதலில் பசும்புல் தலைநீட்டியது**
**பிறகு நாங்கள்...**

**ஓசைகளில் ஊறிய பொருட்பாலை**
**ஆதித் தாயின் முலைசுரந்தது**
**உயிர்ச் சுவையில் விழிதிறந்தோம்**
**புதிதாய்க் கிடந்தது உலகம்,**

**வானம், மீன்கள், மலைகள், முகில்கள்**
**ஆழியின் அலைகள் செவிகளில் மோதின.**
**பைய நாவசைத்த தாய்வாயிருந்து**
**சிறகு முளைத்த சொற்கள் வந்தன.**

**நாங்கள் பறந்தோம்... நாங்கள் பாடினோம்..**
**பூவினத்துக்கெல்லாம் பெயர்கள் சூட்டினோம்**
**நாங்கள் வைத்த பெயர்களில் நதிகள் நடந்தன**

**மலைகளைக் கூப்பிட்டோம்**
**குகைகள் எதிரொலித்தன**
**வானகப் பறவைகள் எம்பெயர்களில் பறந்தன**

**கிளத்தும் பசுமையைக் கிளி என்று சொன்னோம்**
**குக்கூ என்றிசைத்ததை குயிலென விளித்தோம்.**
**கூண்டறியாததாய் எம்சொற்கள் இருந்தன**

**ஆதியில் வடதிசை இருந்தொரு கம்பி வளைத்தது**
**பின் மேற்றிசை வழியொரு கம்பி வந்தது இன்று**
**இந்தியாவிலிருந்தொரு கம்பி நீண்டது**

**எங்கள் வானகம் எங்கள் மலைகள்**
**எங்கள் அலைகள் எங்கள் ஆறுகள்**
**கம்பிகள் சுற்றிய கூண்டுகளுக்குள்**

**எங்கள் பெயர்கள் எங்கள் தெய்வங்கள்**
**எங்கள் சொற்கள் எல்லாம் எல்லாம்**
**கனத்த கம்பிகளின் கடுத்த நிழல்களில்**

**இப்பொழுது எங்களை இந்தியர் என்கிறார்கள்**
**.....**
**தீக்குளிப்பில் கேட்ட சொற்கங்குளை**
**செவிகளும் மனங்களும் எப்படி மறந்தன?**

**நான்கு வீதிகளிலும் மிதிபட்ட இந்திய தேசியம்**
**யாருடைய சூழ்ச்சியால்**
**இன்றெம் தலையில் ஏறியது!**

**கணக்குத் தீர்க்கும் காலம் இது.".**

■

# இன உணர்ச்சி ஓர் இயல்பூக்கம்

# சல்லிக்கட்டில்

## எனது நேரடி அனுபவம்

பெ.மணியரசன்

இரண்டு, மூன்று மாவட்டங்களில்தான் "சல்லிக்கட்டு" நடக்கிறது; ஒட்டுமொத்தத் தமிழர்களின் விளையாட்டல்ல; இதற்குப் போய் அலட்டிக் கொள்ளலாமா என்று எகத்தாளம் பேசுவோர் நம்மிடையே உண்டு. எப்போதுமே எம் இனத்தை வீழ்த்திட எல்லாச் சதி வேலையும் செய்யும் இந்திய ஆட்சியாளர்களும் இப்படி நினைப்பதுண்டு.

அவர்களின் முகத்தில் அறைந்ததுபோல் ஏறுதழுவல் உரிமைப் போராட்டம், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டில் மட்டுமின்றி ஐந்து கண்டங்களிலும் நடக்கிறது. ஆசிய, ஆப்ரிக்க, ஐரோப்பிய, அமெரிக்க, ஆஸ்திரேலியக் கண்டங்களில் வாழும் தமிழர்கள், தமிழ்நாட்டு ஏறுதழுவல் உரிமைக்காக இயன்ற வடிவங்களில் எல்லாம் போராடுகிறார்கள். அந்தந்த நாட்டு மக்களின் ஆதரவோடு போராடுகிறார்கள்.

**அரபு நாடுகளில் அரேபியரும் பங்கேற்ற சல்லிக்கட்டு ஆதரவுப் போராட்டப் படங்களை முகநூலில் பார்த்து வியந்தேன். மக்கள் ஆற்றல் அளப்பரியது; அவர்களின் போராட்ட வடிவங்கள் எல்லையற்றவை.**

இன உணர்ச்சி என்பது உளவியலில் ஓர் இயல்பூக்கம் (Instinct) என்பதை நான் அவ்வப்போது சொல்லி வருகிறேன்.

இதனை மிகைப்படுத்தப்பட்ட கூற்றாக சிலர் நினைப்பார்கள்! அலங்காநல்லூரில் கொட்டும் பனியில் – 16.1.2017 காலையிலிருந்து, இரவு முழுவதும், மறுநாள் விடியும் வரையிலும் வெட்டவெளியில் உட்கார்ந்து போராடும் ஆண்களையும் பெண்களையும் இயக்கியது எது?

இவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியி லிருந்து திரண்ட இளம் ஆண்களும் பெண்களும் ஆவர். அவர்களைத் தளைப்படுத்திய பின் அலங்காநல்லூர் பொது மக்கள், பல நூற்றுக்கணக்கில், போராட்டத்தை அதே இடத்தில் தொடர்ந்தார்கள். சல்லிக்கட்டு நடத்த அனுமதி கிடைக்கும் வரை போராடுவோம் என்றனர். சென்னை கடற்கரையில், மதுரையில் கோயம்புத்தூரில், தூத்துக்குடியில், திருச்சியில், தஞ்சாவூரில் என தமிழ்நாடு முழுவதும் மெழுகுதிரி கொளுத்திக் கொண்டு, இரவு நேரத்தில் கொட்டும் பனியிலும் மாணவர்களும் இளைஞர்களும் ஒன்றுகூடி போராடினர்.

இவர்களையெல்லாம் இயக்கிய ஆற்றல் எது? **"எங்கள் மரபுரிமை" என்ற இன உணர்ச்சி! "என் பாட்டனும் பாட்டியும் பாதுகாத்து வந்த சிறந்த வீர விளையாட்டை, என் தலைமுறையில் இழக்க மாட்டேன்"** என்ற உளவியல்! இந்த உளவியல்தான், வெட்ட வெளியில் – கொட்டும் பனியில் விடிய விடிய குந்திக் குரலெடுத்து முழக்க மிட்ட இளம் பெண்களையும், ஆண்களையும் இயக்கிக் கொண்டுள்ளது. இந்த உளவியல்தான், மனித மனத்தில் இயற்கையாகவே உள்ள இயல்பூக்கம் என்கிறோம்.

ஏறு தழுவல் மீட்புப் போராட்டத்தில் எனது சிறிய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வது, இந்த "இன உளவியலை"ப் புரிய வைத்திட உதவும்!

தஞ்சை மாவட்டம் – பூதலூர் ஒன்றியம் ஆச்சாம் பட்டி எனது ஊர். அங்கு பொங்கல் விழாவின் மூன்றாம் நாள் – அதாவது காணும் பொங்கல் அன்று ஏறுதழுவல் நிகழ்ச்சி வீடுதோறம் நடைபெறும்.



ஒவ்வொரு வீட்டிலும் தொழுவம் கட்டி, பசு மாடு, வண்டி மாடுகளைக் கூட்டமாகத் திறந்து விடுவர். அவற்றைப் பிடிப்பவர்கள் பிடிக்கலாம். பிடிக்காமலும் விடலாம். கொடுவைக் காளைகளை (பாய்ச்சல் காளை களை) தனித்தனியே அதே தொழுவில் திறந்து விடு வார்கள்.

தமிழர் இசைக் கருவியான பறைகளின் எழுச்சி ஓசை கிடுகிடுக்கச் செய்யும். வாசலில் மாடுபிடி வீரர்கள் சூழ்ந்து நின்று காளையை மடக்கிப் பிடிப் பார்கள். அவர்களை வீழ்த்திவிட்டுச் சில காளைகள் ஓடும். சில காளைகள் பிடிபடும்! இரண்டிற்குமே அங்கு கூடியிருக்கும் சிறியவர்கள், பெரியவர்கள், பெண்கள், ஆண்கள் அனைவரும் கொண்டாட்டக் கூச்சல் எழுப்புவர். விசில் ஒலி விண்ணைப் பிளக்கும்! ஒவ்வொரு தொழு முன்பும் ஊரே கூடியிருக்கும்!

பொங்கல் விழாவின் உச்சமே இந்த மாட்டு வேடிக்கைதான் – ஏறுதழுவல்தான்! ஆச்சாம்பட்டியில் முக்கியப் பிரமுகர்களிடையே சிறு சிறு பிணக்குகள் காரணமாகக் கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்த மாடு திறப்பு நடைபெறவில்லை. இந்த ஆண்டோ உச்ச நீதிமன்றத் தடையைத் தமிழ்நாடு அரசு முரட்டுத் தனமாக நிறைவேற்றி வருகிறது.

இந்த ஆண்டு எப்படியும் பொங்கல் விழா மாடு திறப்பும் ஏறு தழுவலும் நடத்த வேண்டுமென்ற உறுதி யுடன், ஆச்சாம்பட்டி சென்று அனைவருடனும் பேசினேன். முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சு. இராசேந்திரன் மற்றும் அனைத்துத் தெரு வாரியாகப் பிரதிநிதிகளும் பிரமுகர்களும் முன்னிலை வகித்து ஊர்க்கூட்டம் நடத்தி, ஒருமித்து சல்லிக்கட்டு நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டது.

மாடு திறப்பும் ஏறுதழுவலும் மிகச்சிறப்பாக நடந்தது. சற்றொப்ப இரு நூறு வீடுகளில் தொழுவம் கட்டி, மாடுகளும் பாய்ச்சல் காளைகளும் திறக்கப் பட்டன. பறைஓசை முழங்கியதும் பரவசம் பற்றிக் கொண்டது. பதினைந்தாண்டுகளுக்குப் பிறகு நடந்த தால் ஊர் மக்களிடையே மிக எழுச்சி ஏற்பட்டது. மிகுந்த மகிழ்ச்சி காணப்பட்டது!

காவல்துறையினர் ஊருக்குள் வந்தார்கள். கடைசி வரை இருந்தார்கள். ஊர் மக்களின் ஒற்றுமையையும் எழுச்சியையும் கண்ட பின்னர், அவர்கள் தடை சொல்லவில்லை. சல்லிக்கட்டு முழுமையாக நடந்து முடிந்தது. பதினைந்து ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த சல்லிகட்டு, அரசுத் தடை செய்திருக்கும் காலத்தில் எப்படி அரங்கேறியது? நம் முன்னோர்கள் கடை பிடித்து வந்த வீர விளையாட்டை, மாடு திறப்பை நம் காலத்தில்கைவிட்டுவிடக்கூடாது என்ற உள்ளுணர்ச்சி எல்லோரிடமும் இருந்தது. பெங்களூர், சென்னை போன்ற தொலைதூர நகரங்களில் பணியாற்றும் கல்வி கற்ற இளைஞர்கள் பொங்கலுக்கு ஊருக்கு வந்திருந் தார்கள். அவர்கள் மாடு திறப்பில் உற்சாகமாக ஈடுபட்டார்கள். அகவை முதிர்ந்த மூதாட்டிகள் மாடு திறப்பில் முழு வேகம் காட்டினார்கள். அவர்கள் ஏழு தழுவி னார்களா அல்லது மாடு திறந்து விட்டார்களா? ஏது மில்லை. எட்டி நின்று வேடிக்கைப் பார்த்தார்கள் சிலர். அம்மூதாட்டிகளில் பலர் வீட்டிலிருந்தவாறே விசாரித்துத் தெரிந்து கொண்டார்கள்.

தமிழினப் பெருமித உணர்ச்சி, இயல்பூக்கமாக எல்லாத் தமிழர் மனத்திலும் இருக்கிறது. அது "இன உணர்ச்சி" – "இயல்பூக்கம்" என்றெல்லாம் அவர்கள் அறிய மாட்டார்கள். ஆனால் அதுதான் அனைவரிட மும் வேலை செய்கிறது. இதை நேராக உணர்ந்தேன்.

எங்கள் ஆச்சாம்பட்டியிலும் பல சாதிகள் உண்டு; பல கட்சிகள் உண்டு. இவற்றிற்கிடையே உரசல்களும் உண்டு. இவற்றை அமுக்கி மேலெழக்கூடிய ஆற்றல் இன உணர்ச்சிக்கு இருக்கிறது!

முகநூல் அழைப்பை ஏற்று சென்னைக் கடற்கரை யில் 8.1.2017 அன்று தமிழ்நாடு முழுவது மிருந்து கலந்து கொண்ட மாணவ, மாணவியர், கற்றறிந்த இளை ஞர்கள் ஆகியோரை இயக்கியதும் அந்த இயல்பூக்க இன உணர்ச்சிதான்! தமிழ்நாடெங்கும் நகரங்களில் பகல் இரவாக தாங்களே கூடி முழக்கமிட்ட இளைஞர் களைக் கூட்டியதும் இன உணர்ச்சிதான்!

அவர்களுக்கு உணவும், மற்ற வசதிகளும் செய்து கொடுக்க தமிழ்மக்கள் தாமே முனைந்து செயல் பட்டதும் இன உணர்ச்சிதான்! ஐந்து கண்டங்களில் வாழும் தமிழர்களை சல்லிக்கட்டுக்காக இயக்குவதும், அலங்காநல்லூரில் கொட்டும் பனியில் விடியவிடிய விழித்திருந்து போராடிய வெளியூர் இளம் ஆண்களை யும் பெண் களையும் இயக்கியதும் இன உணர்ச்சிதான்!

இன உணர்ச்சி பிற்போக்கானதல்ல! சாதியாய், மதமாய், கட்சியாய்ப் பிரிந்து கிடக்கும் தமிழர்களை, மோதிக் கொண்டிருக்கும் தமிழர்களை, பொது இலட்சியத்திற்காக ஒருங்கிணைக்கும் ஆற்றல் இன உணர்ச்சிக்கு உண்டு!

சல்லிக்கட்டுத் தடையை நீக்கிட நடத்தும் போராட்டம் தமிழ்நாடு முழுவதும் நடந்தது. தமிழ் நாட்டில் பல மாவட்டங்களில் சல்லிக்கட்டு விளை யாட்டு உண்டு. சல்லிக்கட்டு – சாதி ஒடுக்கு முறை கொண்டது என்று சிலர் கூறினார்கள். இப்பொழுது நடக்கும் போராட்டத்தில், எல்லா சாதி இளைஞர் களும் மக்களும் ஒன்று திரண்டு கைகோத்து நிற் கிறார்கள். பன்னாட்டு முதலாளிகளின் வேட்டை யைத் தடுத்து நிறுத்தித் தற்காப்பு தொழிற் கொள்கையை வகுக்கும் ஆற்றல், தேசிய இன உணர்ச்சிக்கே இருக்கிறது!

தமிழர் தாயக உரிமைகளைப் பாதுகாக்கும் உந்து விசையாக இன உணர்ச்சியே இருக்கிறது. அந்த இன உணர்ச்சி தமிழர்களிடம் மட்டுமல்ல, மற்ற இனங் களிலும் இயல்பூக்கமாகவே இருக்கிறது. இன உணர்ச்சி தேவை; ஆதிக்க இனவெறி கூடாது! ■


Owned and Published by P.Maniarasan from 21, 1st Street, 1st Sector, Kalaignar Karunanidhi Nagar, Chennai- 600 078 and printed by T.Muthukumar at Print Faast, 53/1,Orandiamman Koil Street,Velachery, Chennai-600042, Editor: P. Maniarasan



பன்மை வெளி
பெ. மணியரசன் - கி. வெங்கட்ராமன்
எழுதிய புதிய நூல்கள்
விற்பனைக்கு
பெ. மணியரசன்
திராவிடம்
தமிழர் மறுமலர்ச்சியை
வளர்த்ததா
வழிமாற்றியதா?
காவிரி
நேற்று–இன்று–நாளை
பெ.மணியரசன்
கச்சத்தீவு
செல்லாத ரூபாய் சொல்லாத சூழ்ச்சி
உலகமயம் இந்தியம் தமிழ்த்தேசியம்
தமிழ்த் தேசக் குடியரசு
தமிழ்த்தேசியத்தின் பன்மை
பசுமை மார்க்சியமும் தமிழ்த் தேசியமும்
தமிழர் தாயகமா வெளியாரின் வேட்டைக் காடா?
ஏழு தமிழர் விடுதலை
தொடர்புக்கு
தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்
21, முதல் பிரிவு, முதல் தெரு,
கலைஞர் கருணாநிதி நகர், சன்னை -600 078.
044 24742911 / 98408 48594 / 94439 18095

Registered with registrar of news papers for RNI No. TN TAM / 2009 / 28475
Regd. No TN / CC / (S) DN / 478 / 16 -18 WPP License No. TN / PMG (CCR) / WPP - 239 / 16 -18
Date of Publication 1st & 16 th of every month



# மாட்டுக் கொம்பில் மாட்டிய இந்தியா

கவிபாஸ்கர்

அறத்தின் அடையாளத்தைக்கண்டு
அதிகாரங்கள் அலறின..
திமிராகவே திரிந்தத் தில்லி
தமிழரின் நிமிர்வுகண்டு நெளிந்தது!

அலங்கா நல்லூர்
அடங்கா நல்லூராகவும்
மெரினா கடற்கரை
தமிழர்க் களமாகவும்!
கிளர்ந்து எழுந்தது!

தமிழ்நாடெங்கும்..
காளைகளைப் போலவே
துள்ளிக் குதித்தன – எம்
காளையர் கூட்டம்!

பூட்டிக் கிடந்த வாடிவாசலுக்கு
திறவுகோல் தயாரிக்கும் திறனை
எம் முன்னோரின் மூச்சுக்காற்று
முடுக்கிவிட்டது!

பண்பாட்டுப் படையெடுப்பின் வழியாக
புண்பட்டுக் கிடந்த தமிழர் உரிமைகள்
புதிய எழுச்சியில் பயணிக்கின்றன!

ஓட்டுப்போட்டு
உயரத்தில் உட்கார வைத்தோம்
ஓட்டையை அடைக்கத் தெரியாத
உதவாக்கரைகளுக்கு
அம்மா..வை தவிர
ஐயாவைத் தவிர
அடுத்த வார்த்தை தெரிவதில்லை!

வாக்குச் சாவடிக்கு மட்டுமே
வாழ்க்கைப்பட்டவர்களா?
வரித்துக் கொண்டு சீறின
இளங்காளைகள்!
பதறிப்போய் நின்றன!
மாண்புமிகு மாஃபியாக்கள்

சட்டங்களின் பெயரால்
சாட்டையால் அடித்தீர்கள்!
சட்டையைப்பிடித்துவிட்டோம்
காறி உமிழ்வதற்குள்
உரிமையை உறுதிப்படுத்து!
விடாது ஒலித்தது
கடற்கரையில் கலக் குரல்!

பீட்டா பின்புலத்தில்
பதுங்கியிருக்கும் ஆரியத்தை
அறுக்கும் வரை
தமிழர் அறம் உறங்காது!

இத்துப்போன
இந்தியத் தொழுவத்தில்
கட்டிவைக்கப்பட்ட மாடுகள்
மோடிமுட்டிகளை முட்டுகிற நாள்
நெருங்கிவிட்டது!

மாட்டுக் கொம்பில்
மாட்டிய இந்தியா
மானங்கெட்டுதான்
மடியும்!